Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ





RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து


(C/720)

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஆனி 06 | திங்கட்கிழமை | (20.06.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 264



சிறப்பான பந்து வீச்சு

06



இலங்கைக்கு ஒத்துழைக்க அழைப்பு

08



Lock உடைத்த பசு

11



விருது வென்ற கவிஞர்

12

## குடும்பஸ்தரின் சடலம் நகுலேஸ்வரத்தில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் நேற்றுக் காலை சிவசுப்பிரமணியம் இராதாகிருஷ்ணன் (வயது 52) என்பவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவர், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெல்லிப்பளை கருகம்பனை கவுனாவத்தை வைரவர் கோவிலில் நடைபெற்ற பொங்கல் விழா மற்றும் வேள்வியில் கலந்து கொண்டு விட்டுத் தனது வீட்டிற்கு செல்லாது நகுலேஸ்வரத்திலுள்ள கொட்டிலொன்றில் தங்கியிருந்ததாகவும் பின்னர் நேற்றுக் காலை இவர் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மல்லாகம் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டுள்ளார்.

பிரேத பரிசோதனை மேற்கொள்ளும் முகமாக சடலம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

## சுயலாப அரசியல் பயணம் மாவை எம்.பி.யின் மறுபக்கம்

(யாழ்ப்பாணம்)



தமிழ்த் தேசியவாதம் பேசி அரசியல் நடாத்தியவர்களில் தற்போதுள்ள பழுத்த அரசியல்வாதிகளில் ஒருவரான மாவை சேனாதிராசா எம்.பி.யின் சுயலாப அரசியல் பயணம் பற்றிய, இதுவரை வெளிவராத பல தகவல்கள் இப்போது இணையத் தளங்களின் ஊடாக கசியத் தொடங்கியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராசா எம்.பி கடந்த ஒருமாத காலத்துக்கு இடையில் குறைந்தது இரு தடவைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை தனிப்பட்ட ரீதியில் சந்தித்துப் பேசி இருக்கின்றார். இச்சந்திப்பு மற்றும் பேச்சு ஆகியன தமிழ் மக்களின் பிரச்சினைகள் சார்ந்தனவாக இருக்கவில்லை. (15ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.நகரில் இன்று கவனயீர்ப்பு போர்




(ச.ஜெயபாலன்)

பெண்களுக்கெதிரான வன்முறைகளையும், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பால்நிலை சமத்துவமின்மைக்கெதிராகவும் யாழ்.நகரில் இன்று மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் மேற்படி கவனயீர்ப்புப் போராட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது.

வடபகுதியில் அண்மைக்காலமாக பெண்களுக்கெதிரான வன்முறைகளும், சிறுவர் துஷ்பிரயோகங்களும், பால்நிலை ரீதியான புறக்கணிப்பு மற்றும் சமத்துவமின்மை போன்ற விடயங்கள் சார்ந்த சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்று வருகின்றது.

இச்சம்பவங்களின் பிரதிபலிப் பாக யாழ்.மாவட்டத்தில் கடந்த ஐந்து மாத காலப்பகுதியில் மட்டும் 50 தற்கொலைகள், 15 கொலைகள், (15ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இல்லை

(கொழும்பு)


இந்த வாரம் அரசினால் அமைக்கப்படவிருக்கும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்காது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி தெரிவுக்குழு அமைக்கும் அரசின் யோசனையை கூட்டமைப்பு ஏற்கனவே நிராகரித்துள்ளது.

அதேவேளை, அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற உள்ளன.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டாலும், கூட்டமைப்புடனான பேச்சுகள் தொடர்ந்து இடம்பெறும் என அரசு தரப்பில் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

## சூரிய சக்தியில் இயங்கும் மொபைல் சார்ஜர்



(கொழும்பு)

சூரிய ஒளியினால் இயங்க கூடிய பொதுப் பயன்பாட்டிற்கான மொபைல் தொலைபேசிக்கான "சார்ஜர்" எனப்படும் மின்சக்தி ஊட்டுவானை மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ரஷ்ய விஜயம் அரசியல் வெற்றி

(கொழும்பு)

ஜனாதிபதியின் ரஷ்ய விஜயம் இலங்கைக்கு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பல வெற்றிகளை ஈட்டித்தந்துள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் பீட்டர்ஸ்பேர்க் நகரில் நடைபெற்ற சர்வதேச பொருளாதார மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட தூதுக் குழுவினர் நேற்று நாடு திரும்பினர்.

மகாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ரஷ்ய ஜனாதிபதி திமிட்டே மெத்வடே ஸ்பானிய பிரத மர் ஜோஸ் லூயிஸ் செப்டேரோ மற்றும் கசகஸ்தான் ஜனாதிபதி நூர்தல்தான் நயார்பயேவ் ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

வன்னியில் நடைபெற்ற மனிதாபிமான நடவடிக்கையின் பின்னர் இலங்கையில் இன்றுவரை பெற்றுள்ள பொருளாதார வெற்றிகள் தொடர்பாகவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாகவும் ஜனாதிபதி அந்நாட்டுத் தலைவர்களுக்கு விளக்கமளித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்மாநாட்டில் கலந்து கொண்டமையால் இலங்கைக்கு அரசியல், பொருளாதார ரீதியில் பல நன்மைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் கிடைத்துள்ளன என ஜனாதிபதி செயலக ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் கபடத்தனம் அம்பலம் தோலுரிக்கிறது சோஷலிச இணையம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையைப் பயன்படுத்தி இந்தியா, இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக சோஷலிச இணையத்தளம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை, சீனா மற்றும் பாகிஸ்தானுடன் சுமுக உறவை கொண்டிருக்கிறது. இது இந்தியாவை பொறுத்தவரை பாதகமான ஒன்றாகும். எனவே இலங்கை அரசாங்கத்திற்கு உதவிகளை செய்து அதன் மூலம் தமது நலனை பாதுகாக்க இந்தியா முயற்சிப்பதாக குறித்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கையை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகியன வரவேற்று அறிக்கையை வெளியிட்டன.

எனினும், இந்தியா, நேரடியாக கருத்து எதனையும் வெளியிடாமல், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸை அழைத்து அவரைக்கொண்டு சூசகமாக போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ளும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது இந்தியாவின் கபடத்தை வெளிப்படுத்துகிறது என்று சோஷலிச இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவையும் சீனாவையும் சமமாக வைத்து இலங்கையின் ராஜபக்ஷ அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக இலங்கையில் பாதக நிலை தோன்றும் என்றும் இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது.

## படையினரின் பயிர்ச்செய்கை

வன்னி நிலப்பரப்பில் படையினர் 711 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனை விவசாய அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன நேரில் சென்று பாராட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் இராணுவத் தலைமையகப் பகுதியில் 250 ஏக்கரிலும், கணேசபுரத்தில் 400 ஏக்கரிலும், துணுக்காய் பிரதேசத்தில் 300 ஏக்கரிலும் பழவகைகள், காய்கறி வகைகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் மிளகாய் போன்றன பயிரிடப்பட்டுள்ளது.


**மாணவச் செல்வங்களே**

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I இன் வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளன.

# கட்டாக்காலி நாய்களுக்கு நிரந்தர கருத்தடை சிகிச்சை

## யாழ்.நகரில் தீவிரமாகிறது செயற்திட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் முன்னோடிச் செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்ட நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள கட்டாக்காலி நாய்கள், மாநகர சந்தைப் பகுதிகள், கொல்களம், மற்றும் பொது இடங்களில் உள்ள கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பின் அவற்றிற்கு விசேட பிங் நிறத்திலான கழுத்துப்பட்டி அணிவிக்கப்பட்டு அவற்றின் காதில் அடையாளமும் இடப்பட்டு திரும்பவும் அவை பிடிக்கப்பட்ட இடத்தில் வாகனம் மூலம் கொண்டுசென்று விடுவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் மாநகர சபை நல்லூர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவில பொது சுகாதார பரிசோதகர்களினால் கையளிக்கப்பட்ட பட்டியலின பிரகாரம் ஏழு வீட்டு வளர்ப்பு நாய்களும் கையளிக்கப்பட்டன.

இச் செயற்பாட்டின் மூலம் நாய்களின் பெருக்கத்தை யாழ். மாநகரப் பகுதியில் ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும் என நம்பப்படுகிறது. தொடர்ந்தும் இச் செயற்பாடுகள் யாழ்.மாநகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட உள்ளது என்று பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் அ.ஜீவநாதன் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றபோது முதலாம் இடத்தினைப் பெற்ற தெல்லிப்பளைப் பிரதேச செயலக அணிக்கான வெற்றிக்கேடயத்தை யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் மற்றும் விளையாட்டு அதிகாரிகளிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# வவுனிக்குளத்தில் நெற்செய்கை மேலும் விஸ்தரிக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)


முல்லை மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் நீர்பாசனத்திட்டத்தின் கீழ் செய்கை பண்ண முடியாதுள்ள 2800 ஏக்கர் வயல் நிலப்பிரதேசத்தையும் செய்கை பண்ணக்கூடிய நிலைக்குக் கொண்டுவர ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரியுள்ளனர்.

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 6897 ஏக்கர் வயல் நிலைப்பரப்பு உள்ளது. இதில் கடந்த காலபோக நெற்செய்கையின்போது 4000 ஏக்கர் வயல் நிலப்பரப்பில் விவசாயிகள் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன் மூலம் செய்கையில் ஈடுபட்டிருந்த குடும்பங்கள் தமது வாழ்வாதார ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் கண்டிருந்தனர்.

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று ஏக்கர் வீதம் வயல்காணிகள் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் செய்கை பண்ணமுடியாத நிலையில் 2800 ஏக்கர் நிலப்பரப்பு காணப்படுகின்றது. நீர்ப்பாசனக் கால்வாய்கள் சேதமடைந்தும் பற்றைகள் மண்டியும் காணப்படுகிறது. இக் காணிகளுக்குரிய விவசாயிகள் இதனால் வயல் செய்கையில் ஈடுபடமுடியாதுள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.(110)

# மக்களின் குறைகளுக்கு குறுகிய காலத்தில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகளுக்குப் பணிப்பு



(யாழ்.நிருபர்)

பிரதேசமட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களுக்குத் திணைக்களத் தலைவர்கள் கட்டாயம் சமூகமளிக்க வேண்டும். கூட்டத்தில் மக்கள் பிரதி நிதிகள் எதிர்நோக்கும் குறைபாடுகள் ஒருமாத காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

இவ்வாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார் பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா. காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அமைசசர் தொடர்ந்து பேசுகையில்,

திணைக்களத் தலைவர்கள் இக் கூட்டங்களுக்கு வராதுவிட்டால் மககளின் குறைகளை அறிந்துகொள்ளவோ நிவர்த்தி செய்யவோ முடியாது. எனவே கட்டாயம் திணைக்களத் தலைவர்கள் பிரதேசமட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் கலந்துகொள்ளவேண்டும். அவசர நிலையில் கலந்துகொள்ள முடியாவிட்டால் தமக்கு அடுத்த நிலையில் உள்ள இரண்டாவது பிரதிநிதியை அனுப்பிவைக்க வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள குறைபாடுகள் ஒருமாத காலத்திற்குள் நிறைவுசெய்யப்பட வேண்டும் அடுத்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திற்கு நான் வரும்போது தமது தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மக்கள் மகிழச்சி தெரிவிக்கவேண்டும், மக்கள் குறைபாடுகளைக் களைவதிலும் பிரதேச ரீதியான அபிவிருத்தியிலும் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.(10)


**தபால் மூலம்** ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six month JUNE 2011 TO NOVEMBER 2011

20 வருட அனுபவம்

**தமிழ் மொழி மூலம்**

| | | |
|---|---|---|
| Dip. in Psychology | - | உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - | காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - | மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - | சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - | வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - | வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - | விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி |
| Dip. in Health & Hospital Management | - | சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி |
| Dip. in Nursing Administration | - | தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - | கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - | மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முழவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

| | | | |
|---|---|---|---|
| ☐ கல்முனை | ☐ புத்தளம் | ☐ யாழ்ப்பாணம் | ☐ ஹட்டன் |
| ☐ மட்டக்களப்பு | ☐ வவுனியா | ☐ கண்டி | ☐ அனுராதபுரம் |
| ☐ திருகோணமலை | ☐ மன்னார் | ☐ கொழும்பு | ☐ நுவரெலியா |

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கை நெறி என்பனவற்றைக் கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு sms செய்து பெற்றுக்கொள்ளலாம். mobile! 0777140844, 0718034848

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**

Country Co - ordinator
MARUTHUR A.HASSEN (B.Sc psychology, M.Sc psychology,

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR SUPER MARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU - 07
web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 222 2917, 067 367 1749, 067 367 9688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத்திகதி: 28.06.2011

(C/783)



வண்ணை திருவருள் மிகு

**ஸ்ரீ வீரகாளியம்பாள்**



வருடாந்த கொடியேற்ற பெருந்திருவிழா

எதிர்வரும் (21.06.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அகில இலங்கை புகழ் பூத்த நாதஸ்வர தவில் வித்துவான்களின் இசைமாரி முழக்கத்துடன் கொடியேற்றப் பெருவிழா மிகச் சிறப்பாக இடம்பெறவுள்ளது. அம்பிகை அடியவர்கள் அனைவரும் அலை அலையாக வருகை தந்து அம்பிகையின் கொடியேற்ற வைபவத்திலும் நண்பகல் நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் கலந்து சிறப்பித்து அம்பிகையின் அருட்கடாட்சத்தினைப் பெற வாரீர்! வாரீர்!!

கொடியேற்றப் பெருந்திருவிழா உபயகாரர்கள்

(C/539)

**எப்பொழுதும் தொண்டு செய்வதற்கு தயாராக இரு; அதற்கு சந்தர்ப்பம் எதையும் தவறவிட்டுவிடாதே. சாதனைபடைக்க சமயம் போதாது என்று குறை கூறாதே. எப்பொழுதும் அடக்கமாகவும், எளிமையாகவும் இருக்கப்பழகிக்கொள்.**

- சுவாமி சிவானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நாம் மட்டுமே சரி என்பது தவறு

எத்தனை தத்துவங்கள், விஞ்ஞானங்கள், வளர்ச்சிகள் இருந்தென்ன? மனிதர்கள் நாகரிகமடைந்திருக்கிறார்கள் என்று இன்னும் தயக்கமின்றிச் சொல்லிக் கொள்வதற்கு முடியவில்லை. உலகம் ரத்தப்பசியோடுதான் இன்னும் அலைகிறது.

மனிதர்கள் சரியானதைத் தேர்வு செய்வதில்லை, விருப்பப்படுவதைத்தான் தேர்வு செய்வார்கள் என்றார் ரொஸ்ரோயெவ்ஸ்கி. அந்த விருப்பாவேசங்களால் வில்லங்கங்களை வருவித்துக் கொண்டே அதற்காக அழுது புலம்பிக்கொண்டும் இருக்கும் விவஸ்தையை அல்லது விவஸ்தையின்மையைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அழுதபடியே குறைகளைப் பெருங்குரலெடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தால் ஆராவது வந்து கவனிப்பார்கள்தானே என்பதற்கப்பால் வேறு யோசனைகளோ முயற்சிகளோ தேவையில்லை என்றே நம்மில் பெரும்பாலோர் நம்பவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

"தீர்வை நாம் வலியுறுத்த மாட்டோம்ளு அது இலங்கை அரசாங்கமும் தமிழ்க்கட்சிகளும் பேசிக் கண்டுகொள்ள வேண்டியது" என்று சிவ்சங்கர் மேனன் சொன்னால், ஒருமுறை திடுக்கிட்டுவிட்டுப் பழையபடி அதற்கும் சேர்த்து எல்லோரையும் ஒரு பாட்டம் திட்டிக் கொண்டிருப்பதாகவே இன்னுமிருக்கிறது நம் சூழல்.

நாம் மட்டுமே சரி என்று முறுக்கிக் கொண்டு நிற்பது ஒருபோதும் பிரச்சினை தீரப் போதுமானதில்லை. மற்றவர்களின் சரி என்ன என்பது பற்றிய கவனிப்பும் கணிப்பும் நமக்கு வேண்டியிருக்கிறது.

வெறுமனே குறை கண்டுபிடிக்கும் வாதங்களினால் வாழ்க்கையை சீர்செய்துகொள்ள முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நூற்றுக்கணக்கான உண்மைகளைச் சொல்லியபடியே தவறான முடிவுக்குச் சென்று சேர்வதில் யாருக்கு நன்மை?

உலகில் கறுப்பு அல்லது வெள்ளையைத் தவிர வேறு வண்ணங்கள் இல்லையென்பது பார்வையிலுள்ள கோளாறுதான். குறைகள் இருக்கலாம். யாரிடம்தான் குறைகள் இல்லை? அல்லது எங்குதான் குறைகள் இல்லை?

தவறுகளையும் சேர்த்துத்தான் நாம் மனிதர்கள். குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்பதும் உண்மையே. "தோட்டத்தில் உன் மூலையை நீ கவனித்துக் கொண்டால் போதும்" என்றார் ரூஸோ. நாங்களோ அடுத்தவன் மூலையில் உள்ள கோளாறுகளைப் பார்ப்பதிலேயே நேரத்தையும் வாழ்வையும் வீணடித்துக் கொள்கிறோம்.

அநியாயங்கள், அடங்காப் போர்கள், பஞ்சங்கள், பாதகங்களினாலும் மனித உயிர்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் உலகில், எவரும் நாம் முழுக்க முழுக்கச் சரியாக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள முடியாது. அப்படி நெஞ்சை நிமிர்த்திக் கொள்பவர்களையே மேலும ஆபத்தானவர்களாய்க் கருத வேண்டியிருக்கிறது.

பலரை மகிழ்ச்சிப்படுத்தவும் வாழ்வை அர்த்தப்படுத்தவும் வளைந்து கொள்வது ஒன்றும் இழிவானதில்லை. நம் தவறுகளைக் கண்டுகொள்ள மறுத்து மற்றவர் தவறுகளுக்காய் முறுக்கிக்கொண்டு நேராய் நிற்பதில் நாம் பெருமைப்பட முடியாது. அப்படி நிற்பவர்களிடமும், நாம் தணிந்து அவர்களையும் தளர்த்தி வழிக்குக் கொண்டுவர முயல்வதில் இழிவெதுவுமில்லை. பலருக்குமான வாழ்வைச் செய்துதரும் மேன்மைச் செயலே அது.

மக்களிடமும் மனிதத்திடமும் நாம் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் எவரிடமும் பேச நமக்குத் தடை இல்லை. எல்லாத் தரப்புடனும் எல்லாச் சமூகங்களுடனும் நாம் பேச முடியும். அயோத்தியில் வீரமும் இறுமாப்பும் இல்லை ஏனென்றால் அங்கு போரும் வன்முறையும் இல்லை என்று கம்பன் சொன்னதை நாம் புரிந்துகொள்ள முடியும். நம்மிடம் மட்டுமே முழுச் சரியும் இருப்பதாக நினைத்துக் கொள்வதால்தான் இணக்கத்தைப் புறந்தள்ளும் இறுமாப்பு வெல்கிறது. வாழ்வு தோற்றுப் போகிறது.

எங்கள் பக்கத்தில் நியாயமும் சரியும் இருப்பதாக நாம் நினைத்துக் கொண்டிருப்பது ஒன்றும் தவறல்ல. நாங்கள் நினைத்துக் கொண்டிருப்பது மட்டுமே நியாயமும் சரியும் என்பது தான் தவறு. எதிர்த்தரப்பின் சந்தேகங்களைப் புறக்கணித்து விட்டு எமது தீர்வை நாம் கோர முடியாது, பெற்றுவிடவும் முடியாது.

- ஆசிரியர்

# தேர்தல் தொடர்பான வன்முறை நாளாந்தம் உயர்வதாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகள் மற்றும் சட்ட மீறல்கள் குறித்து பதிவாகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை, நாளாந்தம் உயர்ந்து செல்வதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக இரண்டு முறைப்பாடுகளும், அச்சுறுத்தல் குறித்து இரண்டு சம்பவங்களும் தமது அமைப்பிற்கு பதிவாகியிருப்பதாக 'க.பே' எனப்படும் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறினார்.

இதேவேளை பாரதூரமான சம்பவங்கள் எதுவும் தமக்குப் பதிவாகவில்லை என்று, பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அத்துடன் இதுவரை தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடித்திருப்பதை அவதானிக்க முடியவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் மக்களிடையே தேர்தல் தொடர்பான ஆர்வம் மந்தகதியிலேயே நிலவுகின்றதாக தேசிய தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ராசங்க ஹரிஸ்சந்திர கூறினார்.

# வெளிநாட்டில் மருத்துவப் பட்டங்கள் பெற்றவர்களை வரவேற்கும் அரசு

(கொழும்பு)

வெளிநாடுகளில் மருத்துவப் பட்டங்களைப் பெற்று நாட்டிற்கு வருகை தரும் மருத்துவர்களை வரவேற்க அரசாங்கம் தயாராகவுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய வைத்தியசாலையில் முன்னாள் பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்கவின் சேவையினைப் பாராட்டும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்தக் கருத்தினை தெரிவித்தார்.

வெளிநாடுகளில் மருத்துவப் பட்டங்களைப் பெற்ற மருத்துவர்களை கைவிடுவதற்கு சிலர் முனைவதாகவும், அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், தகைமைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கான நியமனங்கள் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கொழும்பு தேசிய வைத்தியசாலையில் முன்னாள் பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க, இலங்கை தற்சமயம் சிறந்த அபிவிருத்தியை நோக்கிச் செல்வதாக குறிப்பிட்டார்.

# வீஸா காலா வதியானவர்களையே பிரிட்டன் நாடு கடத்தியுள்ளது

## - குடிவரவுத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

வீஸா காலாவதியாகி பிரிட்டனில் தங்கியிருந்தவர்களையே பிரிட்டன் அரசாங்கம் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைத்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் பிரிட்டன் அரசாங்கத்தினால் இலங்கைக்கு 26 பேர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் இலங்கையர்களா என முதலில் நாம் விசாரணைகளை மேற்கொண்டோம்.

அந்தப் விசாரணைகளை அடுத்து அவர்கள் அனைவரும் இலங்கையர்களே என்பதை உறுதி செய்து கொண்டோம். அத்துடன் அவர்களது இருப்பிடங்களையும் அடையாளம் கண்டு கொண்டுள்ளதுடன், அவர்களது விபரங்களையும் திரட்டினோம்.

இவ்வாறு பிரிட்டன் அரசாங்கத்தினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட 26 பேரில் பெரும்பாலானோர் வீஸா காலாவதியாகிய நிலையில் பிரிட்டனில் தங்கியிருந்தவர்கள் என்பது உறுதி செய்யப்பட்டது.

இவ்வாறு நாடு திரும்பியவர்களில் 14 தமிழர்கள், 8 முஸ்லிம்கள் உட்பட சிங்களவர்கள் சிலரும் காணப்பட்டனர்.

இவர்களது முழு விபரங்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளோம். அவர்கள் விசாரணைகளைத் தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனத் தெரிவித்தார்.

# மின்விநியோக அபிவிருத்தி; கொரிய அரசு நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையின் மின் விநியோக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒரு கோடி 60 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க கொரிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

மின் சக்தித்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிற்கும் கொரிய அரசாங்க உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இடையே கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பொன்றை அடுத்தே இந்த நிதி உதவி உறுதி அளிக்கப்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, அம்பாந்தோட்டை, புறுத்தாக்கண்ட 500 கிலோ வாட் சூரிய சக்தி மின் நிலையத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் அமைச்சர் கொரிய அதிகாரிகளுக்கு விளக்கம் ஒன்றை வழங்கினார்.

சூரிய சக்தி மூலம் வீதி விளக்குகளை இயக்குவது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரியாவில் சூரிய சக்தியில் இயங்கும் வீதி விளக்குகள் திருப்திகரமாக செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு கொமர்ஷில் வங்கி 200 மில்லியன் கடன்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி கொமர்ஷில் வங்கியூடாக இதுவரையில் 200மில்லியன் ரூபா கடனுதவி வழங்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சி கொமர்ஷில் வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு கால போகச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 18,000ரூபாவீதம் கடனுதவி வழங்கப்பட்டது. தற்போது சிறுபோகச் செய்கைக்காக ஒரு ஏக்கருக்கு 25,000 ரூபா வீதம் விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

காலபோகச் செய்கையின் போது கடனைப் பெற்றவர்கள் அதனை முழுமையாக மீளச் செலுத்தி தற்போதைய சிறுபோகச்செய்கைக்கான கடனாக ஏக்கருக்கு 25000ரூபாவீதம் பெற்றுவருகின்றனர். காலபோகக் கடனைச் செலுத்தி முடித்து சிறுபோகச் செய்கையில் ஈடுபட்டு கடனுக்காக விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு பத்து நாட்களுக்குள் கடனுதவி செய்துகொடுக்கப்படுகின்றது. தொடர்ந்தும் விவசாயிகள் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்து வருகின்றனர் என்றார். (110)

# முல்லை. மாந்தை கிழக்குப் பிரதேசம் கணிசமான அபிவிருத்தியை எட்டியது

## மாற்றலாகிச் செல்லும் உதவி அரசாங்க அதிபர் கே. ஜெயக்காந் தினமுரசுக்குத் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மாந்தை கிழக்குப் பிரதேசம் கடந்த ஒன்றரை வருட காலப் பகுதியில் அபிவிருத்தியில் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளதாக மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உதவி அரசாங்க அதிபராக இருந்து தற்போது புதுக்குடியிருப்பு பிரதேச உதவி அரசாங்க அதிபராக மாற்றலாகிச் சென்றுள்ள கே. ஜெயக்காந் 'தினமுரசு' நாளிதழுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1973ஆம் ஆண்டு இப்பிரதேசத்திற்கென தனியான உதவி அரசாங்க அதிபர் பணிமனை உருவாக்கம் பெற்றது. கடந்த முப்பது வருடங்களாக இப்பிரதேசம் மின்சார வசதிகள், பிரதான வீதிப் புனரமைப்புக்கள் மற்றும் முக்கியமான மக்களின் சேவைகள் இல்லாத நிலையிலும் பற்றாக்குறையான நிலையிலும் இருந்தது.

இப்பிரதேசத்தில் மீள் குடியேற்றம் நடைபெற்று ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையில், அபிவிருத்தியில் கணிசமான அளவு முன்னேற்றத்திற்குச் சென்றுள்ளது.

மின்சார வசதிகள் துரிதமாகவும், விரைவாகவும் ஏற்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் "தேசத்துக்கு ஒளியூட்டுவோம்" என்ற தொனிப் பொருளில் மின்சார வசதிகள் எதுவும் இன்றி இருந்த மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

பாரிய குன்றும் குழியுமாக பிரயாணம் செய்ய முடியாத அளவுக்கு மோசமாக சேதமடைந்திருந்த இப்பிரதேசத்தின் பிரதான வீதிகள், புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு அவ்வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதைவிட, மக்களுக்கான அடிப்படைத் தேவைகளான சுகாதார வசதிகள் குடிநீர் வசதிகள், மலசல கூட வசதிகள் உட்பட பல்வேறான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வகையில் கடந்த ஒன்றரை வருட காலத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசம் கணிசமான அளவு முன்னேற்றத்தை கண்டுள்ளது. தொடர்ந்து இப்பிரதேசத்திற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. பூர்த்தி செய்யப்படாதிருக்கின்ற ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளும் பூரணப்படுத்தப்படும் என எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார். (110)

## பெரும் எண்ணிக்கையான பயணிகள் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

பொசன் பண்டிகையை முன்னிட்டு பெரும் எண்ணிக்கையான தென்னிலங்கைப் பயணிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

கடந்த புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் ஏராளமான மக்கள் வாகனங்கள் மூலம் வந்திருந்தனர்.

யாழ்ப்பாணம் வந்திருந்த மக்கள் நயினாதீவு, நாகவிகாரையில் இடம்பெற்ற பொசன் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

இந்தப் பயணிகளின் வருகையால் யாழ். வீதிகளில் போக்குவரத்தில் நெருக்கடி ஏற்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (வி)

## உதவி அரச அதிபர் நியமனம்

(முல்லைத்தீவு)

மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபராக திருமதி சிறிஸ்கந்தராசா சாந்தினி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் துணுகாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் திட்டமிடல் அதிகாரியாக இதுவரை காலமும் பணியாற்றி வந்தார். மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபராக இருந்த கே. ஜெயக்காந்த் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபராக மாற்றலாகிச் சென்றுள்ளதை அடுத்து இவருக்கு இந்நிய மனம் வழங்கப்பட்டுள்ளது. (110)

## பஸ்ஸில் திடீர் பிறேக்; தவறி வீழ்ந்தது குழந்தை

(யாழ்ப்பாணம்)

பயணிகளை ஏற்றிவந்த பஸ் வண்டி திடீரெனப் போட்ட பிறேக்கினால் தாயின் மடியில் இருந்த ஒரு வயது குழந்தை தவறி வீழ்ந்தது.

பஸ்ஸிக்குள் தவறிவிழுந்த குழந்தை மயக்கமுற்றதினால் உடனடியாகவே சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டது. தென் பகுதியிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகளின் பஸ்ஸிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. (வி)

## கிராம அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடு மக்கள் நலன்சார்ந்ததாக இருக்கவேண்டும்

### சந்திரகுமார் எம்.பி. அறிவுறுத்து

(முரசுமோட்டை)

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மக்கள் நலன் சார் விடயங்களில் கவனம் எடுக்கவேண்டும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாகத்தினருடனான மண் விநியோகம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிகையில், மக்களுடைய தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளை இலகுபடுத்தி அம்மக்களுக்கு வழங்குவதற்காகவே கிராம மட்ட அமைப்புக்கள் தெரிவு செய்யப்படுகிறது.

தெரிவு செய்யப்படும் கிராம மட்ட அமைப்புக்கள் மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் அக்கறை எடுக்கவேண்டும்.

சில கிராம முன்னேற்ற சங்கங்கள் அவ்வாறு செயற்பாடாது வியாபார நோக்கம் கருதியே செயற்படுகின்றன. இதனை சங்கங்கள் தவிர்த்து பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும்.

சில கிராம அபிவிருத்தி சங்கங்கள் பொதுச்சேவைக்கு முன்வருவதில்லை என்று சுட்டிக்காட்டினார். மக்கள் நலன் கருதாது செயற்படும் கிராம மட்ட அமைப்புகளை மாற்றிய மைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (110)

## கடற்கரை வீதிக்கு மின்சாரம் எப்போது?

(யாழ். நிருபர்)

காரைநகர் கடற்கரை வீதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. காரைநகர் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் சுட்டிக்காட்டியும் தமது பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பின்னடிப்பதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மின்சார சபை, பிரதேச சபை, உதவி அரசாங்க அதிபர் போன்றோருக்கு பல தடவைகள் மகஜர் கொடுத்தும், தமது பகுதிக்கு மின்னிணைப்பு வழங்கப்படாமை குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஊரி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் கூறுகையில், பின்தங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த எங்களின் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படாமை மிகவும் மனவேதனை தருவதாகவும், எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார். (10)

## வாக்காளர் பதிவு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை - நவாலி கிழக்கு ஜே/ 133, ஜே/ 135 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இவ் ஆண்டுக்கான வாக்காளர் அட்டைகளைப் பதிவு செய்யும் வேலைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் அப்பகுதியிலுள்ள கிராம சேவையாளர்கள் வீடு வீடாகச் சென்று பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ். நிருபர்)

ஆரிய திராவிட பாஷபிவிருத்திச் சங்கம் நடாத்தும் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைகளுக்குத் தோற்றவிரும்புவோர் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபரிடமோ அல்லது சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் பண்டிதர் வகுப்புகளின்போது வருகை தந்தோ தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என்று ஆரிய பாஷாபிவிருத்திச் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (10)


## சட்ட ஆவண நடமாடும் சேவையினால் ஆனைக்கோட்டையில் மக்கள் நன்மை

யு.என்.டி.பி. நிறுவனத்தினால் சட்ட ஆவணங்களை வழங்கும் நடமாடும் சேவை ஆனைக்கோட்டை ஆதவன் பாலர் பாட சாலையில் நடைபெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ. யோ. எழிலரசி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண பதிவாளர் நாயகம் திருமதி இராசரட்ணம், ஆனைக் கோட்டை கிராம சேவையாளர் நிசாந்தன், சமுர்த்தி உத்தி யோகத்தர் ஸ்ரெலா மற்றும் யு.என்.டி.பி. நிறுவன உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெற்ற இந்நடமாடும் சேவையில், காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவு, திருமணப் பதிவு என்பன செய்து கொடுக் கப்பட்டதுடன், சான்றிதழ்களும் உடனடியாக வழங்கப்பட்டன. இச்சேவையில் அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு சேவையைப் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10)

## வாழ்வாதார மேம்பாட்டுக்கு ஐயனார் தேவஸ்தானம் உதவி

(யாழ். நிருபர்)

காரைநகர் - வியாவில் ஐயனார் தேவஸ்தானம் வறுமைக்கோட்டின் கீழுள்ள விதவைகள், அங்கவீனர், ஏழை மாணவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு உதவித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்ட ஏழை மாணவர், விதவைகள், அங்கவீனர் ஆகியோர் பயன்பெற்று வருகின்றனர். மேற்படி ஆலய சமூக மேம்பாட்டுத் திட்டத்திற்கு இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறியின் அனுசரணையுடன், காரைநகர் இலங்கை வங்கிக் கிளையினால் ஐம்பதாயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி வங்கி முகாமையாளர் சி. சிவகுமாரன் தெரிவித்துள்ளார். (10)





கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் கடந்த 15ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடத்திய ஆனித் திங்கள் முழுநிலா நாள் கலை விழாவில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ராதா கிருஷ்ணன் உரையாற்றுவதையும், அனைவரையும் பரவசமடையச் செய்த "யாவரும் கேளீர்" என்ற இசை நாடகத்தையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (112)

# மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலிருந்து 986 குடும்பங்கள் முல்லையில் மீள்குடியமர்வு

## அரசாங்க அதிபர் பத்திநாதன் தகவல்

(வவுனியா)

வவுனியா - மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களில் 986 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் 22 ஆம் 24 ஆம் 27 ஆம் திகதிகளில் மீள்குடியேற்றப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் சுதந்திரபுரம், தேவிபுரம், வள்ளிபுனம் ஆகிய பகுதிகளிலும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் செம்மலை கிழக்குப் பகுதியிலும் எதிர்வரும் 22 ஆம் 24 ஆம் 27ஆம் திகதிகளில் மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது.

இந்தப் பகுதிகளில் கண்ணி வெடி அகற்றி முடிவடைந்ததற்கான சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ள நிலையிலேயே இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவான சுதந்திரபுரம் பகுதியில் எதிர்வரும் 22 ஆம் திகதி மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது. இங்கு 346 குடும்பங்களைச் சேர்ந்த 1106 பேர் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

தேவிபுரம் பகுதியில் எதிர்வரும் 24 ஆம் திகதி மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது. இங்கு 306 குடும்பங்களை சேர்ந்த 1098 பேர் மீள்குடியேற்றப்படவுள்ளனர். வள்ளிபுனம் பகுதியில் எதிர்வரும் 27 ஆம் திகதி மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது. இங்கு 307 குடும்பங்களை சேர்ந்த 894 பேர் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் செம்மலை கிழக்குப் பகுதியில் எதிர்வரும் 24 ஆம் திகதி மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது. இங்கு 27 குடும்பங்களைச் சேர்ந்த 91 பேர் மீள்குடியேற்றப்படவுள்ளதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

மீள்குடியேற்றப்படவுள்ள இந்த மக்களுக்கு உணவுப் பொருட்களும் தற்காலிகக் கொட்டகைகள் அமைப்பதற்கான கூரைத்தகடுகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், யூ.என்.எச்.சி.ஆர் இன் 20,000 ரூபாய் பணக் கொடுப்பனவும் தலா ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படவுள்ளது. இந்த மக்களுக்கான ஏனைய அடிப்படைத் தேவைகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கோம்பாவில், இரணைப்பாலை, உடையார் கட்டு வடக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் கண்ணிவெடி அகற்றி முடிவடைந்ததற்கான சான்றிதழ் இன்னும் இரு வாரங்களில் கிடைக்கப்பெறுமெனவும் இதனைத் தொடர்ந்து மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் அங்கு மீள்குடியேற்றப்படுவார்களெனவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

# பழம் பதனிடும் நிலையம்

மீசாலையில் அமைந்துள்ள பழவகை பதனிடும் நிலையத்தை விரைவில் ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகளை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டதும் தென்மராட்சி பிரதேசத்தில் பழங்களுக்கு கிராக்கி ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (11)

# திருத்தப்படுகிறது குமுதினிப் படகு

(நெடுந்தீவு)

குமுதினிப் படகு மீண்டும் பழுதடைந்து திருத்தப் பணிக்காக கரையேற்றப்பட்டுள்ளது.

இந்தப் படகு திடீரெனக் கோளாறு ஏற்பட்டுப் பழுதடைந்துள்ளது. இதைத் திருத்தச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. தற்போது நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் படகும் மற்றும் தனியார் படகுகளுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. (வி)

# 21 ஆவது நினைவு தினமும் இரத்ததானம் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா) அணியைச் சேர்ந்தவர்கள் 21 ஆவது தியாகிகள் தினத்தை நேற்று அனுஷ்டித்தனர்.

இதனை முன்னிட்டு நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் அஞ்சலிக் கூட்டம் இடம் பெற்றது.



இதில் அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள், ஆதரவாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். அஞ்சலிக் கூட்டம் நிறைவடைந்ததும், யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற இவர்கள் இரத்ததானம் வழங்கினர்.

# நிவாரணக் கிளைகளை மூடுகின்றது தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்

(தெல்லிப்பழை)

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் மக்கள் படிப்படியாக மீள்குடியேற்றப்படுவதை அடுத்து, தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல்வேறு பிரதேச செயலக பிரிவில் இயங்கி வந்த தனது சில நிவாரணக் கிளை விற்பனை நிலையங்களை மூடி வருவதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக பலாலி வீதியில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் இயங்கி வந்த நிவாரணக் கிளை விறபனை நிலையமும், காங்கேசன்துறை வீதியில் இணுவில் கந்தசுவாமி கோவில் சந்தியில் இயங்கி வந்த நிவாரணக் கிளை விற்பனை நிலையமும் மூடப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் 26 ஆம் கிளை விற்பனை நிலையங்களில் 16 நிவாரணக் கிளை விற்பனை நிலையங்கள் தற்போது வெவ்வேறு பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கி வருகிறன.

மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் உடனடியாக குடியேறக் கூடிய வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுவதால், அப்பகுதிகளில் சங்கக் கிளைகளை உடனடியாகத் திறப்பது சாத்தியமில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தாவடி, றக்கா வீதி, ஆனைக்கோட்டை, மானிப்பாய், சித்தங்கேணி, சீரணிச்சந்தி, தொட்டிலடி, உடுவில், கந்தரோடை, இணுவில், மயிலணி, மல்லாகம், உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, இருபாலை ஆகிய இடங்களில் இடம்பெயர்நத மக்களுக்கான நிவாரணக் கிளைகள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் பலியானவரின் குடும்பத்துக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கவும்

## யாழ். மேல்நீதிமன்றம் உத்தரவு

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் பலியானவரின் குடும்பத்திற்கு ஒன்றரை இலட்சம் ரூபா வழங்குமாறும், தவறும் பட்சத்தில் இரண்டு வருட சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும், எதிராளிக்கு யாழ். மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் கரவெட்டி - யாக்கரை கிழக்கைச் சோநத வேலாயுதம் என்பவர் உயிரிழந்திருந்தார். இவ்வழக்குத் தொடர்பான விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் இடம்பெற்றது.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி எதிராளியான கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த சிவராசா ரவிக்குமாருக்கே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் குற்றப் பணமாக மூவாயிரம் ரூபாவும், இறந்தவரின் மனைவிக்கு ஒன்றரை இலட்சம் ரூபாவும் செலுத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

தவறும் பட்சத்தில் இரண்டு வருட சிறைத்தண்டனையும், ஐந்து வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையையும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (18)

# வலந்தலையில் பஸ்தரிப்பு நிலையம் காரை அபிவிருத்திச்சபை அடிக்கல்



(காரைநகர்)

காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் வலந்தலைச் சந்திப்பகுதியில் பஸ்தரிப்பு நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது. காரைநகர் பிரதான வீதியான மேற்கு வீதி, கிழக்கு வீதி பிரிந்து செல்லும் இடத்தில் பஸ்தரிப்பு நிலையமொன்று இல்லாத காரணத்தால், பயணிகள் பெரும் அவலத்தை அனுபவித்து வந்தனர்.

இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் காரைநகர் அபிவிருத்திச் சங்கம் இப்பகுதியில் பஸ்தரிப்பு நிலையமொன்றை அமைக்க முன்வந்துள்ளது. இந்த பஸ்தரிப்பு நிலையத்தை அமைபபதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு காரை அபிவிருத்திச்சபைத் தலைவர் கே.சோமசேகரம் தலைமையில் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணியளவில் இடம்பெற்றது.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் லண்டன் காரை அபிவிருத்திச் சபைத தலைவர் வி.நாகேந்திரம், வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றுப் பொறியியலாளர் ச.சிவனேசராசா உட்பட பல பிரமுகர்களும், பொது மக்களும் கலந்துகொண்டனர். (50)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(20.06.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆனி 05 ஆம் நாள்.

இராகுகாலம 7.24–8.54, சுபநேரம் 11.54 –1.24

நட்சத்திரம் அவிட்டம் பி.இ. 5.38 வரை

திதி: பஞ்சமி பி.இ 2.32 வரை.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

**மேடம்:–** பணக்கஷ்டம், தேக ஆரோக்கியம், மூத்தோர் ஆசி, குடும்பத்தில் மகிழ்ச்சி, சபலம்.

**ரிஷபம்:–** பணப் புழக்கம், குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை, காரிய சித்தி, விபத்து வரலாம்.

**மிதுனம் :–** பணக் கஷ்டம், உளநலம் பாதிப்பு, தேக சுகம் குறைவு, காரியத் தடை, குடும்பத்தில் கசப்பு.

**கடகம்:–** பண வரவு, காரிய சித்தி, தேக ஆரோக்கியம், உறவினர் வருகை, விபத்து வரக்கூடும்.

**சிம்மம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், பண வரவு, பெரியோர் ஆசி, தியாகம்.

**கன்னி :–** குடும்பத்தில் குழப்பம், காரியத்தடை, உடல் நலம் பாதிப்பு, பணக் கஷ்டம், சபலம்.

**துலாம் :–** பணக் கஷ்டம், நண்பர் தொல்லை, உடல்நலக் குறைவு, மூத்தோர் ஆசி, சுயலாபம்.

**விருச்சிகம்:–** குடும்பத்தில் குதூகலம், பண வரவு, தேக ஆரோக்கியம், மூத்தோர் ஆசி, தியாகம்.

**தனுசு:–** பணக் கஷ்டம், உடல்நலக் குறைவு, மருத்துவச் செலவு, நண்பர் தொல்லை, குடும்பத்தில் சலனம்.

**மகரம்:–** குடும்பத்தில் குழப்பம், பண நஷ்டம், தேக நலம் பாதிப்பு, உறவுகள் வருகை, நிம்மதிக் குறைவு.

**கும்பம் :–** பண வரவு, குடும்பத்தில் குதூகலம், மூத்தோர் ஆசி, தேக ஆரோக்கியம், விபத்து வரக்கூடும்.

**மீனம்:–** பண வரவு, தேக ஆரோக்கியம், பெரியோர் ஆசி, நண்பர் வருகை, தியாகம்.

# மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களின் ஆர்வம் குறைவு!

(நெல்லியடி)

மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதால் விளையாட்டு ஆர்வலர்களிடையே விசனம் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

யாழ். மாவட்ட மட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி கடந்த 18, 19ஆம் திகதிகளில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட மட்ட போட்டிகள் ஒவ்வொற்றில் இரண்டு அல்லது மூன்று போட்டியாளர்களே பங்குபற்றுகின்றனர். இது விளையாட்டு ஆர்வலர்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது ஒவ்வொரு பிரதேசத்திற்குமான விளையாட்டு உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு விளையாட்டுக்குமான பயிற்றுநர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இருந்தபோதும், இம்முறை போட்டியாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதற்கான காரணங்களை உரியவர்களிடம் கேட்டபோது, தேசிய மட்டப் போட்டிகள் பெரு விளையாட்டுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, பாடசாலை மட்ட மற்றும் மாகாண மட்டப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன. இதனால்தான் போட்டியாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதெனக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், விளையாட்டு ஆர்வலர்களின் கருத்துப்படி இவற்றை எல்லாம் ஏற்கனவே திட்டமிட்டு செயற்படவேண்டும். அது மட்டுமல்லாமல் போட்டியாளர்களின் சாதனைக்காகவே போட்டி நடத்த வேண்டுமே தவிர போட்டியை நடாத்தி முடிப்பதற்காக அல்ல எனவும் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் சரியான திறமைக்குரியவர்கள் மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்றாவிடின் யாழ். மாவட்டம் இம்முறை விளையாட்டில் வீழ்ச்சி காணப்படுமே எனவும் அவர்கள் அச்சப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். (12)

## பாடசாலை மட்ட நீச்சல் போட்டி

(கொழும்பு)


இலங்கை பாடசாலை நீர்விளையாட்டுச் சங்கம், கல்வி அமைச்சு, மைலோ நிறுவனம் ஆகியன இணைந்து பாடசாலைகளுக்கிடையிலான நீச்சல் போட்டியை 38ஆவது தடவையாக நடத்துகிறது.

இப்போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகி 26ஆம் திகதி வரை கொழும்பு ஆனந்தா கல்லூரியின் நீச்சல் தடாகத்தில் இடம்பெறுகிறது.

இவ்வருடம் இப்போட்டியில் 9,11,13,15,17 மற்றும் 19ஆவது பிரிவிற்குட்பட்ட ஆண், பெண் போட்டியாளர்கள் பங்குபற்றுவார்கள் என கொழும்பு சீ. ஆர்.எப்.சி மைதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சங்கத்தின் தலைவர் றோகண கருணாரத்ன தெரிவித்தார்.

இதேவேளை இப்போட்டி கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளாக இடம்பெறுகின்மை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 1800க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்ளுகின்றனர்.

விளையாட்டு செய்திகள்



எட்வின் ஜோய்

## எட்வின் ஜோயின் பந்து வீச்சால் சுருண்டது சென் தோமஸ் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

எட்வின் ஜோயின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களால் குருத்தலவலை சென் தோமஸ் கல்லூரி அணியை வீழ்த்தியது.

17 வயதுப் பிரிவின் குருத்தலவலை சென் தோமஸ் அணியின் பிரிவு இரண்டு அணிக்கும், யாழ். சென் ஜோன்ஸ் அணிக்குமிடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் குருத்தலவலை சென் தோமஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென் தோமஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய சென் தோமஸ் அணி 40 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பண்டார 98, ரணவீர 25 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் அபாரமாகச் செயற்பட்ட எட்வின் ஜோய் 10 ஓவர்கள் வீசி, 44 ஓட்டங்களைக் கொடுத்து எட்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 28 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நிதர்சன் 78, விந்தகரன் 30, அனோஜன் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

## சுவிஸ் வெற்றி

21 வயதுக்குட்பட்டோருக்கான பிபா கிண்ண கால்பந்து போட்டி நடைபெற்று வருகின்றது. இந்தப் போட்டியின் குருப் 'ஏ' பிரிவில் நடந்த கடைசி நாள் ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து அணியும் பெலாரஸ் அணியும் அரை இறுதிக்கு முன்னேறின. ஆர்கசில் நடந்த ஆட்டத்தில் சுவிஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் பெலாரசை வென்று முன்னேறியது.

பெலாரஸ் இந்த ஆட்டத்தில் தோற்ற போதும் குருப் 'ஏ' பிரிவில் 2ஆம் நிலையை பெற்ற அணி என்பதால், அரை இறுதிக்கு முன்னேறியது. அரை இறுதிக்குள் நுழைந்த இந்த அணிகளின் பயிற்சியாளர்களிடம் வேறுபட்ட பிரதிபலிப்புகள் ஏற்பட்டன. ஸ்விட்சர்லாந்து பயிற்சியாளரான பெர்லுகிதமி கூறுகையில், எங்களது முதல் இலக்கை அடைந்தது மகிழ்ச்சியை அளிக்கிறது. நாங்கள் அரை இறுதியில் ஆடுவதை எண்ணியே இருந்தோம். இந்தப்போட்டிக்கு நாங்கள் பொருத்தமானவர்கள். எல்லா விடயமும் இப்போது சாத்தியமாக உள்ளனர். இறுதிப்போட்டிக்குள் நுழைய வேண்டும் என்பது எங்களின் இப்போதைய எண்ணம். எங்களிடம் சக்தியான 23 வீரர்கள் உள்ளது. ஒரே ஒரு வீரரை இழந்து உள்ளோம் கிரானிட்ஜாக்கா மட்டும் சஸ்பெண்ட் ஆகி ஆட முடியாமல் உள்ளார் என்றார். அடுத்த ஆட்டத்தில் யாருடன் மோதினாலும் மிக தீவிரமாக மோதுவோம். நாங்கள் இங்கிலாந்து செக் குடியரசு ஆடும் கட்டத்திற்குள் செல்ல விரும்பவில்லை. இருப்பினும், எதிராளி குறித்து தகவலைக் கண்டறிவோம் என்றும் கூறினார்.

## வடமாகாண பாடசாலை சதுரங்கம் யாழ்.மாவட்டத்திற்கு 11 இடங்கள்

(வவுனியா)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் 11 இடங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி நேற்று முன்தினமும், நேற்று வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஆண், பெண்கள் இருபாலாருக்குமான போட்டி வயது அடிப்படையில் இடம்பெற்றது.

15 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், இரண்டாமிடத்தை யாழ். இந்துக் கல்லூரியும், மூன்றாமிடத்தை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், இரண்டாமிடத்தை யாழ். இந்துக் கல்லூரியும், மூன்றாமிடத்தை மன்னார் சென் சேவியர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

15 வயது பெண்கள் பிரவில் முதலாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையும், இரண்டாமிடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரியும், மூன்றாமிடத்தை பருத்தித்துறை வட இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

15 வயது பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை இந்து மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரியும், மூன்றாமிடத்தை வடமராட்சி மத்திய கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

சதுரங்கப் போட்டியில் இவ்வாறு 11 இடங்களை யாழ். மாவட்டப் பாடசாலைகள் கைப்பற்றிக் கொண்டதையிட்டு விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் விளையாட்டு அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்தனர். இது மிகப் பெரிய வெற்றியென்றும், தேசிய மட்டத்தில் சிறப்பாகச் செயற்பட வாழ்த்தும் தெரிவித்தனர். (12)

## விளையாட்டு உபகரணங்கள் மாநகர உறுப்பினரால் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை உறுப்பினர் மனுவல் மங்களநேசனின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து நாவாந்துறை புனித மரியாள் விளையாட்டுக்கழகத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

யாழ். மாநகர சபை முதல்வர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநகர முதல்வர் யோகேஸ்வரி பங்குணராசா, மாநகர சபை உறுப்பினர்களான மனுவல் மங்களநேசன், மா. கனகரத்தினம் ஆகியோர் இணைந்து விளையாட்டுப் பொருட்களைக் கையளித்தனர்.







அண்மையில் நடைபெற்று முடிந்த கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை எதிர்வீரசிங்கம், கல்விப் பணிப்பாளர் குருகுலராசா மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் வழங்குவதைக் காணலாம். (12)

# சிறிலங்கன் பிரிமியர் லீக் போட்டி இந்திய வீரர்கள் பங்குபற்றார்

(புதுடில்லி)

அடுத்த மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள சிறிலங்கன் பிரிமியர் லீக் போட்டிகளில் தனது வீரர்களை விளையாட அனுமதிப்பதில்லை என இந்திய கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மாகாண அணிகளுக்கிடையிலான இச்சுற்றுப்போட்டி ஜூலை 18 ஆம் திகதி ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வணிகள் ஒவ்வொன்றிலும் 5 வெளிநாட்டு வீரர்களைச் சேர்ப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சனிக்கிழமை மாலை இந்திய கிரிக்கெட் சபை தலைமையகத்தில் நடைபெற்ற இந்திய பிரியமியர் லீக் கூட்டமொன்றின்போது, இலங்கைக்கு இந்திய வீரர்களை அனுப்புவது குறித்து பிசிசிஐ தலைவர் மனோகர் கவலை வெளியிட்டுள்ளதாக இந்தியாவின் சண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்கன் பிரிமியர்லீக் போட்டிகளில் இந்திய வீரர்கள் விளையாட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பிசிசிஐ உயரதிகாரி ஒருவர் சண்டே எக்ஸ்பிரஸுக்கு உறுதிப்படுத்தியதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. இப்போட்டிகளை யார் ஏற்பாடு செய்கிறார்கள் எனத் தெரியவில்லை. இந்நிகழ்வு குறித்து உத்தியோகபூர்வமான கடிதங்கள் எதுவும் எமக்கு இன்னும் கிடைக்கவில்லை. பத்திரிகைகள் மூலமாக மாத்திரமே சிறிலங்கன் பிரிமியர்லீக் போட்டிகள் குறித்து நாம் அறிந்துள்ளோம் என அவர் கூறினார். இந்திய வீரர்கள் அதில் விளையாடமாட்டார்கள் என அவர் கூறியுள்ளார்.

## இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)

சிறிலங்கன் பிரிமியர் லீக் போட்டிகளில் விளையாட இந்திய வீரர்களை அனுமதிப்பதில்லை என்ற இந்திய கிரிக்கெட் சபையின் தீர்மானம் குறித்து அதிர்ச்சியடைந்துள்ள இலங்கை கிரிக்கெட் சபை இது குறித்து இன்று கலந்துரையாடவுள்ளது.

இன்று திங்கட்கிழமை இவ்விடயம் குறித்து இடைக்கால நிர்வாகக் குழு கலந்துரையாடும். இந்நிலைமையை நாம் ஆராய வேண்டியிருப்பதால், இது குறித்து இப்போதே கருத்துக்கூறுவது கால முதிர்ச்சியற்றதாகும் என இலங்கை கிரிக்கெட் செயலாளர் நிஷாந்த ரணதுங்க கூறியுள்ளார். இலங்கை மாகாண அணிகளுக்கிடையிலான இப்போட்டிகளில் 12 இந்திய வீரர்கள் விளையாடவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அஸ்தமனமாகும் கெய்லின் கிரிக்கெட் டெஸ்ட் அணியிலிருந்தும் நீக்கப்பட்டார்



(கிங்ஸ்டன்)

இந்திய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் சபையுடன் மோதல் போக்குக் காரணமாக அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல், டெஸ்ட் அணியிலும் சேர்க்கப்படவில்லை. ஏற்கனவே ஒரு நாள் தொடரில் இடம் பெறாத கெய்ல் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறார். வெய்ன் பிராவோவும் நீக்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் ஆடாத மூத்த வீரர் 3 சந்தர்போல், டெஸ்ட் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

முதலாவது டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந்தியத்தீவு அணி வீரர்கள் விவரம் வருமாறு: டேரன் சமி (தலைவர்), பிரன்டன் நாஷ், அட்ரியன் பரத், கார்ல்டன் பாக் (விக்கெட் கீப்பர்), தேவேந்திர பிஸோ, டேரன் பிராவோ, சந்தர்போல், பிடெல் எட்வர்ட்ஸ், ரவி ராம் போல், கெமார் ரோச், சாமுவேல்ஸ், சர்வான், லெண்டில் சிம்மன்ஸ். இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

## ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டி; அபிநவ் பிந்தரா தகுதி பெற்றார்



லண்டனில் நடைபெற போகும் ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடுதலில் பங்கேற்க இந்தியாவின் அபிநவ் பிந்த்ரா தகுதி பெற்றுள்ளார். ஜேர்மனியின் முனிக் நகரில் உலகக் கிண்ணத் துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் 10 மீற்றர் ஏர் ரைபிள் பிரிவில் அபிநவ் பிந்த்ரா 8 ஆவது இடத்தைப் பிடித்தார். எனினும் புள்ளிகளின் அடிப்படையிலும், ஒதுக்கீடு அடிப்படையிலும் அவர் ஒலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்றார்.

உலகக் கிண்ணத் துப்பாக்கி சுடுதலில் சீனாவின் கியுனன் ஹ 651 புள்ளிகளுடன் தங்கம் வென்றார். மற்றொரு சீன வீரர் தாவோ வாங் 649.5 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், ஸ்லோவேகியாவின் ஜோபஸ் 649.3 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் வென்றனர். அபிநவ் பிந்த்ரா 646.2 புள்ளிகளுடன் எட்டாவது இடத்தையே பிடிக்க முடிந்தது. எனினும் ஒலிம்பிக்கில் பங்கேற்பதற்கான இறுதி வாய்ப்பான இந்தப் போட்டியின் மூலம் அவர் ஒலிம்பிக்கில் தனது பங்கேற்பை உறுதி செய்து கொண்டார். இந்தப் போட்டியில் 86 நாடுகளைச் சேர்ந்த 890 துப்பாக்கி சுடும் வீரர்கள் பங்கேற்றனர்.

## முடிவில் மாற்றமில்லை

(புதுடில்லி)

நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை விடயத்தில் இந்திய கிரிக்கெட் சபையின் நிலைப்பாட்டில் எந்த மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என இந்திய கிரிக்கெட் சபையால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை குறித்து கடந்த சில நாட்களாக பல்வேறு செய்திகள் வெளிவந்தாலும், இந்த, முறை குறித்த இந்திய கிரிக்கெட் சபையின் முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை. இந்த, முறையில் ஒரு அங்கமாக இருக்கும், பிட்ச் ஆகும் பந்து எந்தத் திசையில் செல்லும் என்பதைக் கணிக்கும் தொழில்நுட்ப முறையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறோம். இந்த விடயத்தில் இந்திய கிரிக்கெட் சபையின் நிலைப்பாடு நிலையானதாகும் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்த தொழில்நுட்ப முறையை எதிர்க்கும் இந்திய கிரிக்கெட் சபையின் முடிவு ஏமாற்றம் அளிப்பதாக ஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித் மோடி கூறியுள்ளார்.

## ஏகான் கிளாசிக் ரென்னிஸ் ஜேர்மன் வீராங்கனை சம்பியன்

(லண்டன்)

இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரில் நடந்த ஏகான் கிளாசிக் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், ஜேர்மனி வீராங்கனை சேபைன் லிசிக்கி சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் விளையாட முன்னணி வீராங்கனை டேனியலா ஹன்டுசோவாவுடன் (ஸ்லோவகியா) மோதிய லிசிக்கி 6-3, 6-2 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.


இறுதிப் போட்டியில் ஹன்டுசோவா வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டதால் அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டது.

## அணி வீழ்ச்சியடையக்கூடாதென்பதற்காகவே காயத்துடன் விளையாடினாராம் கௌதம் கம்பீர்

(புதுடில்லி)

எனது காயம் எப்படி இருந்தாலும், எது நடந்தாலும் விளையாட விரும்புவதாகக் கூறினேன். எனது அணியின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்க நான் விரும்பவில்லை. எனவே இதுவே எனக்கு சரியான முடிவாகப் பட்டது. காயத்துடன் போட்டியில் ஆடியது எனது தனிப்பட்ட முடிவாகும். இவ்வாறு கௌதம் கம்பீர் தெரிவித்தார்.

உலகக் கிண்ண இறுதிப்போட்டியின் போது எனக்கு இந்தக் காயம் ஏற்பட்டது. ஐ.பி.எல். தொடரில் ஆடியபோது அணியின் உடல்தகுதி நிபுணர் ஆண்ட்ரூ லெய்பஸ், எனது உடல்தகுதியை கண்காணித்தார். காயம் குறித்து மேற்கொள்ளப்பட்ட எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பரி சோதனையின் முடிவு ஏப்ரல் 24ஆம் திகதி வந்தது. மறுநாள் ஏப்.25ஆம் திகதி மும்பைக்கு எதிரான ஆட்டம். அறிக்கை குறித்து விவாதிக்கலாம் என்று லெய்பஸ் முதற்கட்டமாக என்னிடம் கூறினார்.



மேற்கிந்தியத்தீவு சுற்றுப்பயணத்தில் விளையாட ஆர்வமாக இருந்தேன். ஆனால் காயத்துடன் தொடர்ந்து ஆடி, காயம் மேலும் பெரிதானால், சத்திர சிகிச்சை செய்ய வேண்டி வரலாம் என்று டாக்டர்கள் அறிவுறுத்தியதால், மேற்கிந்தியத்தீவு தொடரில் இருந்து விலகினேன். நிறையப் பேர் நாட்டைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் எப்போதும் நாட்டை பற்றி மட்டுமே சிந்திப்பேன். காயத்தில் இருந்து குணமடைய 4 வாரங்கள் ஓய்வு எடுத்து வருகிறேன். ஒரு வேளை மேற்கிந்தியத்தீவுத் தொடரில் விளையாடி, சத்திர சிகிச்சை செய்ய நேரிட்டால், 6 மாதங்கள் விளையாட முடியாமல் போய் இருந்திருக்கலாம். இதன் மூலம் பல போட்டிகளைத் தவற விட்டு இருப்பேன். அதற்கு பதிலாக 4 வாரங்கள் ஓய்வு எடுப்பது என்ற முடிவு சிறந்ததுதானே என்றார்.

## தனது மனம் கவர்ந்த வீரர் டெண்டுல்கர் என்கிறார் ராவிட்

(கிங்ஸ்டன்)

கிரிக்கெட்டில் எனது மனம் கவர்ந்த வீரர் சச்சின் தான். அவர் எனக்கு இன்னும் தூண்டுகோலாக உள்ளார் என இந்திய வீரர் ராவிட் தெரிவித்தார்.

சச்சின் ஒரு வியக்கத்தக்க வீரர். கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக வாழ்வின் மிகச்சிறந்த கிரிக்கெட்டை விளையாடி வருகின்றார். முதன் முதலாக நான் கிரிக்கெட் விளையாட வந்த போது, அதற்கு முன்பாக ஏழு ஆண்டுகளாக சர்வதேச போட்டிகளில் சாதித்துக் கொண்டிருந்தார் சச்சின்.

கடந்த 1997இல் மேற்கிந்தியத்தீவு வந்த போது, சச்சின் தான் அணியின் தலைவர். அப்போது அவர் தான் எனக்குத் தூண்டுதலாக இருந்தார். அன்று முதல் இன்று வரையிலும், இதில் எந்த மாற்றமும் இல்லை.

கடைசியாக டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று ஏழு மாதங்கள் ஆகிவிட்டது. இருப்பினும், மேற்கிந்தியத்தீவு, இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான, ஏழு டெஸ்ட் போட்டிகளுக்கு தயாராகவே உள்ளேன். இதில் சிறப்பாகச் செயற்படுவேன் என்று தெரியும். இருந்தாலும், சற்று நெருக்கடி இருந்து கொண்டுதான் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பட்டம் வெல்ல போராடுவேன்

(லண்டன்)

விம்பிள்டன் பட்டத்தை வெல்வதே எனது இலக்கு. அதற்காக கடுமையாகப் போராடுவேன் என சுவிஸ்சர்லாந்தின் ரென்னிஸ் வீரர் பெடரர் தெரிவித்தார்.

இன்று லண்டனில் ஆரம்பமாகும் விம்பிள்டன் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரெஞ் ஓப்பனில் அடைந்த தோல்வி ஏமாற்றம் அளித்தது. இருப்பினும் விம்பிள்டன் தொடரில் சிறப்பாக ஆடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. இதில் சிறப்பாகச் சாதிக்கும் பட்சத்தில் அடுத்த ஆண்டு இங்கு நடைபெறும் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்லக்கூடியதாக இருக்கும். ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே எனது அடுத்த இலக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யுத்தமொன்று இல்லாத சூழலில் அவசரகாலச் சட்டம் எதற்காக?

## - கேள்வியெழுப்புகின்றார் அமரதுங்க எம்.பி.



(கொழும்பு)

நாட்டில் யுத்தமொன்று இல்லாத சூழலில் அவசர காலச் சட்டத்தை தொடர்ந்தும் அமுலில் வைத்திருப்பதற்கான தேவை என்னவென்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க கேள்வியெழுப்புகின்றார்.

அவசர காலச்சட்டத்தை தொடர்ச்சியாக நீடிப்பதை எதிர்த்து ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். ஜனநாயகத்தின் அடிப்படை உரிமைகளான எழுத்துச் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவற்றை நசுக்கு வதற்கான ஒரு உபகரணமாகவே அர சாங்கம் அவசர காலச்சட்டத்தை பயன் படுத்திக் கொண்டிருக்கின்றது.

இந்நாட்டில் அவசர காலச்சட்டம் அறி முகப்படுத்தப்பட்டதன் பின்னர் அதனை நீண்ட காலம் தொடர்ச்சியாக அமுலில் வைத்திருந்த அரசாங்கம் இன்றைய அரசாங்கம்தான்.

ஆனால் அதன் மூலமான அரசியல் மற்றும் பொருளாதார இழப்புகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை.

நாட்டில் யுத்தமொன்று இல்லாத சூழ லில், அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந் தும் அமுலில் வைத்திருந்து நாட்டு மக் களின் சுதந்திரத்துக்குக் கட்டுப்பாடுகளை விதிக்காது உடனடியாக அவசர காலச்சட் டத்தை தளர்த்த அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் அவர் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஐ. நா. சபையும், சர்வதேச நாடுகளும் இலங்கைக்கு ஒத்துழைக்க வேண்டும்

## - ஸ்பெயின் பிரதமர் வலியுறுத்து



(கொழும்பு)


ஐ.நா.வும், சர்வதேச நாடுகளும் இந் தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு ஒத் தாசையளிக்க வேண்டுமென ஸ்பெயின் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். ரஷ்யா வில் நடைபெறும் பொருளாதார உச்சி மாநாட்டில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தியுள்ள தாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத் துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மூன்று தசாப்த கால யுத்தத்தின் பின், வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் மேற்கொள்ளப்படும் மீள்குடி யேற்ற நடவடிக்கைகள் மற்றும் அபிவி ருத்தித் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷஸ்பெயின் பிரதமருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

அதன்போதே ஐக்கிய நாடுகள் சபை யும் சர்வதேசமும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு ஒத்தாசை வழங்குவதன் மூலம் போருக்குப் பின்னரான இலங்கை யைக் கட்டியெழுப்ப தங்களாலான பங் களிப்பை நல்க வேண்டும் என்று ஸ்பெ யின் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்

# இலங்கை மீதான குற்றச்சாட்டுகள் ஈராக்மீது சுமத்தப்பட்டதற்கு சமன்

## - தூதுவர் தயான் ஜயதிலக கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கையில் யுத்தக் குற்றம் இடம் பெற் றதாகக் கூறி சில சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள காணொளி மூலமான குற் றச் சாட்டுக்கள் ஈராக் மீது சுமத்தப்பட்ட குற் றச்சாட்டுக்களுக்கு சமனானது என பிரான்ஸிற்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இலங்கை இராணுவம் பொது மக்களைக் கொன்றதாக குற்றம் சுமத்தப்படுமாயின், இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இரா ணுவத்தினரிடம் சரணடைந்த புலி உறுப் பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்படுகின் றமை எவ்வாறு என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் யுத்தக் குற்றம் இடம் பெற்றதாக சனல் -4 தொலைக்காட்சி காணொளிகளை வெளியிட்டுள்ள நிலையில், இது குறித்து பிரான்ஸிலுள்ள வானொலி ஒன்று இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலகவிடம் கேள்வி எழுப் பியுள்ளது. இதற்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள் ளார்

# இலங்கைக்கு எதிரான தடைகளை ஐ.நா. கொண்டுவருவதற்கு முயற்சி

## என்கிறது கொழும்பு வார இதழ்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக, விரைவில் தடைகளைக்கொண்டு வருவதற்கு ஐ.நா. முயற்சி செய்து வருவதாக கொழும்பி லிருந்து வெளிவரும் ஆங்கில வாரஇத ழொன்று தெரிவித்துள்ளது.

அரசுக்கான அனைத்துலக ஆதரவு குறைந்துள்ளதாகவும், எதிர்வரும் செப் ரெம்பர் மாதம். நடைபெறவுள்ள ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை மீது தடைகளை விதிக்கக் கோரும் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகவும் அந்த வாரஇதழ் தெரி வித்துள்ளது.

இந்த அச்சுறுத்தலை முறியடிக்கின்ற வகையில் இலங்கை அரசாங்கம் இதுவரை அனைத்துலக ஆதரவைப் பெறத் தவறியுள்ளதாக இலங்கை அர சின் மூத்த அமைச்சர் ஒருவர் கூறியுள் ளார்.

அத்துடன் அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 17ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்ற அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான அரசகுழு, வெளிநாடு களின் போதுமான ஆதரவைப் பெற்றுக் கொள்ளத் தவறியுள்ளதாகவும் அந்த அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமைகள் தொடர்பாக மகிந்த சமரசிங்க இலங்கை அரசின் முடிவுகளை எடுக்கும் உயர்மட்டங் களுக் குத் தெரியப்படுத்தியுள்ள அவர் கூறி யுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு 9 நாடுகளே வெளிப்படை யான ஆதரவைத் தெரிவித்திருந்ததாக வும், ஏனைய நாடுகள் கொழும்புக்கு எதிரான நிலைப்பாட்டையே வெளிப்படுத் தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் புதிய தீர் மானம் ஒன்றைக் கொண்டு வர அமெ ரிக்கா திட்டமிட்டுள்ளது. இது இலங்கைக் குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்தத் தீர்மானத்துக்கு ஏனைய நாடுகளின் ஆதரவை தேடும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது என்றும் இலங் கையின் மூத்த அமைச்சர் குறிப்பிட் டுள்ளார்.

இந்தநிலையில் அனைத்துலக சமூகத் தின் பலமான அச்சுறுத்தலை எதிர் கொள்ள வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளதாகவும், அமைச்சர் எச்சரித் துள்ளதாக அந்த வாரஇதழ் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# இலங்கைத் தமிழர் பாதிக்கப்படுவதாக நீலிக்கண்ணீர் வடிக்கும் வெள்ளைக்காரர்

## - என்கிறார் அமைச்சர் விமல்வீரவன்ச



(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களுக்காக வெள் ளைக்காரர்கள் நீலிக்கண்ணீர் வடிப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித் துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாடொன்றின் போது மேற் கத்தேய நாடுகள் இலங்கைத் தமிழ் மக் கள் மீது காட்டும் கரிசனை குறித்த விமர் சனக் கருத்துக்களை வெளியிடுகை யிலேயே மேற்கண்டவாறு அவர் தெரி வித்துள்ளார்.

கண்டி இராச்சியத்தின் கடைசிக்காலத் தில் சிங்களவர்கள் குறித்து நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டு கண்டிக்குச் சென்ற வெள்ளையர்கள், கடைசியில் சிங்கள பிரபுக்கள் மீதான மக்கள் நம்பிக்கையைத் தகர்த்தெறிந்து கடைசியில் கண்டி இராச் சியத்தைத் தங்கள் காலடிக்குள் கொண்டு வந்தனர்.

இன்று மீண்டும் அவர்கள் இலங்கை பற்றி நீலிக்கண்ணீர் வடிக்கத் தொடங் கியுள்ளனர். இந்நாட்டில் மனித உரிமை கள் இல்லையாம். இந்நாட்டில் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளனவாம். அப்பாவித் தமிழ் மக்கள் மீது அநியாயம் இழைக்கப்படுகின்றதாம்.

அதையெல்லாம் வெள்ளைக்காரர்க ளால் தாங்கிக் கொண்டிருக்க முடியா தாம். அவர்களுக்கு வேதனையாக இருக் கின்றதாம். அன்று கண்டிச் சிங்களவர் களுக்காக வடித்த அதே நீலிக்கண்ணீரை இன்று தமிழ் மக்களுக்காக அவர்கள் வடித்துக் கொண்டிருக்கின்றார்கள் என் றும் அமைச்சர் விமல் வீரவன்ச தொடர்ந் தும் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க நீதிமன்ற அழைப்பாணை; நிராகரித்தார் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

நீதிக்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பாக அமெரிக்க நீதிமன்றம் அனுப் பிய அழைப்பாணையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

படையினரால் படுகொலை செய்யப் பட்டவர்களின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட 30 மில்லியன் டொலர் நட்டஈடு கோரும் மூன்று வழக்குகள் தொடர்பாக, ஜனாதிபதிக்கு வொஷிங்டன் டிசி நீதிமன்றம் அழைப்பாணை அனுப் பியிருந்தது.

இந்த அழைப்பாணை ஜனாதிபதியின் வதிவிடமான அலரி மாளிகைக்கு முதலில் அனுப்பப்பட்டது.

ஆனால் அதை ஏற்க அவர் மறுத்து விட்டதையடுத்து, நீதி அமைச்சு அதைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இதுபோன்ற அழைப்பாணைகளுக்கு பதிலளிக்க வேண்டியதில்லை என்று இலங்கை நீதியமைச்சின் செயலர் சுகத கம்லத் தெரிவித்துள்ளார்.

தமது சட்ட நிலைப்பாடு தொடர்பாக அமெரிக்க நீதிமன்றத்துக்குத் தகவல் தெரிவிக்கப் போவதாகவும் அவர் கூறி யுள்ளார்.

அதேவேளை, இந்த நீதிமன்ற நட வடிக்கையானது ஜனாதிபதிக்கும் அர சுக்கும் தொல்லை கொடுக்கின்ற வகை யில் திட்டமிடப்பட்டதொன்று என இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

அனைத்துலக ரீதியாக ஏற்றுக் கொள் ளப்பட்ட பிரகடனத்தின்படி, அரச தலை மைகளுக்கு விதிவிலக்கு உள்ளது. எனவே, ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவை அமெரிக்காவுக்கு செல்ல விடா மல் தடுக்க முனைவது பயனற்ற செயல் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெற வுள்ள ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் உரையாற்றுவதற்காக நியு யோர்க் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சரியான விடையைத் தெரிவுசெய்க.**

31. **NO ENTRY** சில பொது இடங்கள், கட்டிடங்கள், கதவுகளின் அருகே இச்சொல் எழுதப்பட்டிருக்கும். இதன் பொருள்?

1.நுளைவுச்சீட்டுக்கள் முடிவடைந்தன
2. நிறுத்துக.
3. உட்செல்ல முடியும்
4. உட்பிரவேசியாதீர்

32. **S T OP** சில காவலரண்களின் முன், பொலிஸார், வீதி ஒழுங்கைக் காண்பிக்கும் மாணவர் கைகளில் இத்தகைய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அட்டை காணப்படும். இதன் பொருள்?

1. நிறுத்துக
2. வருக
3. நன்றி
4. வணக்கம்

33. **O P E N** சில கடைகள், அலுவலகங்களின் கதவுகளில் இத்தகைய சொல் காணப்படும். இதன் பொருள்?

1. நிறுத்துக
2. திறந்துள்ளது
3. மூடியுள்ளது
4. வணக்கம்

34. **exp.date** சில பொருட்களில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கும். இதன் பொருள்?

1. உற்பத்தித் திகதி
2. பழுதடைந்த திகதி
3. காலாவதித் திகதி
4. பாவிக்கத் தொடங்கும் திகதி

35. **WELCOME** சில கட்டடங்கள், வீடுகள், அலுவலகங்களின் பிரதான வாசல்களில் இத்தகைய சொற்களைக் காணலாம். இதன் பொருள்?

1. வணக்கம்
2. நல்வரவு
3. உட்பிரவேசியாதீர்
4. வாடகை வீடு

**கீழே விபரிக்கப்பட்டுள்ளனவற்றை தரப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதுக.**

36. என் வடிவம் கோளம், என் உடலின் உட்புறம் காற்று நிரம்பி இருக்கும். என்னை எடுத்தால் எல்லோரும் ஓங்கி ஓங்கி அடிப்பார்கள். ஆயினும் நான் அவர்கள் சந்தோசத்திற்காக அவர்களை நோக்கி ஓடுவேன்..

.......................................................................................................


37. எனக்கு கால்கள் இல்லை. நான் ஊர்ந்து செல்வேன். நான்போகும் பாதையில் ஒரு திரவத்தை விட்டுச் செல்வேன். எனக்கு உள்ளே இழக்கக்கூடிய உடல் உண்டு. எதிரிகள் என்னைப் பிடிக்க வந்தால் ஓட்டினால் ஆன என் பாதுகாப்பான வீட்டினுள் ஒளித்துக் கொள்வேன்.

.......................................................................................................

38. என்னைத் தரையில் விட்டால் பாய்ந்து ஓடுவேன். எனக்குத் திடமான வடிவம் இல்லை. என்னால் தான் நீங்களும் உலகிலுள்ள தாவரங்கள், விலங்குகள் அனைத்து உயிரினங்களும் உயிர்வாழ்கின்றன. நான் மழையாகி... தரையிலும் முகிலாகி வானிலும் பல்வேறு நிலைகளில் இடங்களில் உள்ளேன்.

.......................................................................................................

**வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.**

39.

(1) (2) (3) (4)

40.

(1) (2) (3) (4)





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I

நேரம் -45 நிமிடம்


# கல்விமுரசு

வெளியீடு 19





இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


**கீழ் வரும் தொடர்புகளை அவதானித்து சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**





01.  இன் பெறுமதி என்ன? .......................................

02.  இன் பெறுமதி என்ன? .......................................


03.  இன் பெறுமதி என்ன?.......................................



04.  இன் பெறுமதி என்ன?.......................................

05.  - A இன் பெறுமதி என்ன?.......................................

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

06 கீழ் வருவனவற்றுள் வித்தியாசமானது


(1) (2) (3) (4)

07.  என்பது  X 6 என அமையின்  என்பது எவ்வாறு அமையும்?




(1) (2) (3) (4)



பொதுசன நூலகம்

08) வித்தியாசமான உருவின் கீழ் கோடிடுக.



(1) (2) (3) (4)

09. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது உருவமாற்ற மின்றித் தெரியக்கூடிய சொல் ஒன்று.
   1. CAT   2. TAT   3. POT   4. RAT

10. ஒரு கிலோ இரும்புத்துண்டு, ஒருகிலோ பஞ்சு, ஒரு கிலோ தென்னந்தும்பு இவற்றுள் பாரம் கூடியது எது?
   1. இரும்புத்துண்டு   2. பஞ்சு   3. தென்னந்தும்பு   4. மூன்றும் சமம்

11. ஒரு குளத்திலுள்ள பூக்கள் ஒவ்வொரு நிமிடமும் இரட்டிக்கும். ஒரு மணித்தியாலத்தில் அக்குளம் முழுமையாக பூவினால் நிரம்புமாயின் குளத்தின் அரைவாசி பூவினால் நிரம்ப எடுக்கும் நேரம்.
   1. 30 நிமிடம்   2. 59 நிமிடம்   3. 99 நிமிடம்   4. 61 நிமிடம்

12. மஞ்சுவின் தற்போதைய வயதின் மூன்று மடங்கு அவனது தாயாரின் வயதாகும். தாயாரின் வயதுடன் 5 வருடங்களைக் கூட்டினால் அவனது அப்பாவின் வயது பெறப்படும். மஞ்சுவின் தற்போதைய வயது 12 ஆண்டுகள் எனின், மஞ்சுவின் அப்பாவின் வயது என்ன?
   1. 36 வருடம்   2. 20 வருடம்   3. 31 வருடம்   4. 41 வருடம்

13. பல பெருமரங்கள் வேரோடு சாய்ந்தன. சில வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. ஒரே இரைச்சலும் மக்களின் அவலக் குரல்களும் கேட்டன. இச்செயல்.
   1. பெருமழை   2. இடிமுழக்கம்   3. புயல்காற்று   4. கலவரம்

14. மனிதர்களிடையே பிரச்சினைகள், முரண்பாடுகள், மனவேறுபாடுகள் ஏற்படக் காரணம்.
   1. ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாமை   2. அன்பு, மன அடக்கம் அதிகமாதல்
   3. போதைப் பொருள் பாவனை   4. கல்வியறிவு வளர்ச்சி பெற்றமை

15. பின்வரும் சொற்களுள் ஒன்று ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது. வேறுபாடான சொல்லின் கீழ் கோடிடுக.
   1. பூ   2. வேர்   3. இலை   4. காய்

**கீழ்வரும் தகவலை கவனமாக வாசித்து 16 - 22 வரையிலான வினாக்களுக்குச் சரியான விடையைக் கூட்டினுள் எழுதுக.**

எங்கள் அப்பா தீபாவளிக்குச் சட்டைகள் வாங்கி வந்தார். நான் சிவப்பு, நீலம், பச்சை நிறங்களில் சட்டைகள் எடுத்துக்கொண்டேன். என் அண்ணா நீலம், பச்சை, வெள்ளை நிறங்களில் சட்டைகள் எடுத்துக்கொண்டான். என் தங்கை ஊதா, நீலம், பச்சை ஆகிய நிறங்களில் சட்டைகள் பெற்றுக்கொண்டாள்.

16. நாங்கள் மூவரும் பெற்ற நிறச்சட்டைகள் யாவை?
   1. நீலம், பச்சை   2. ஊதா, நீலம்
   3. பச்சை, வெள்ளை   4. சிவப்பு, ஊதா

17. எனது அண்ணாவோ தங்கையோ பெறாத நிறச்சட்டை யாது?
   1. பச்சை   2. சிவப்பு   3. நீலம்   4. வெள்ளை

18. எனது அண்ணா மட்டும் பெற்ற நிறச்சட்டை யாது?
   1. பச்சை   2. சிவப்பு   3. நீலம்   4. வெள்ளை

19. எனது தங்கை மட்டும் பெற்ற நிறச்சட்டை யாது?
   1. ஊதா   2. சிவப்பு   3. நீலம்   4. பச்சை



**ஒருவன் 16.30 மணியளவில் நடந்து சென்றபோது அவனது நிழல் அவனுக்கு முன்பக்கமாக நீண்டு நிலத்தில் வீழ்ந்தது.**

20. அவனது வலது கைப்பக்கத் திசை
   1. கிழக்கு   2. வடக்கு   3. தெற்கு   4. மேற்கு

21. அவனின் முகப்பக்கம் யாது திசை?
   1. கிழக்கு   2. வடக்கு   3. தெற்கு   4. மேற்கு

22. அவன் நிழல் விழும் திசை?
   1. கிழக்கு   2. வடக்கு   3. தெற்கு   4. மேற்கு

**23-25 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விபரத்தை நன்கு வாசித்து சரியான விடைக்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.**

23. சுந்து பிந்துவிடம் கொண்டிருந்த ஆழமான அன்பு காரணமாக பிந்துவைப் பிரிந்து வாழக் கஷ்டப்பட்டான். ஆனால் நந்து வெளிநாடு சென்றபோது சுந்து அதிகம் கவலைப்படவில்லை.
   1. சுந்துவிற்கு நந்துவிடம் ஆழமான அன்புண்டு
   2. பிந்து வெளிநாட்டில் வாழ்கின்றார்
   3. சுந்து, நந்து, பிந்து மூவரும் தனித்தனியே வாழ்கின்றனர்

24. “மணியம் வீடு தேடி நாயாக அலைந்தார்”
   1. மணியம் வீட்டைப் பெறுவதற்காக நாயாகி விட்டான்
   2. மணியத்திடம் நன்றியுணர்வு, விசுவாசம் என்பன வளர்ந்து விட்டன
   3. மணியம் வீட்டைப் பெற கடும் முயற்சி செய்கிறார்

25. “நாங்கள் கடுமையாகப் படித்தால் பரீட்சையில் சித்தியடையலாம்”
   1. வரன் சித்தியடைந்தமையால் கடும் முயற்சியுடன் படித்திருப்பான்
   2. கண்மணி படிப்பதும் அருமை. அவள் சித்தியடைவதும் அருமை
   3. சிவராமன் கடும் உழைப்பாளி. எனவே அவன் சித்தியடைந்திருப்பான்

**கீழே தரப்படும் தகவல்களை வாசித்து நன்கு விளங்கி சரியான விடையைத் தெரிவு செய்க.**

26. வெப்பத்தால் சில பொருட்கள் விரிவடைகின்றன
   இதனை நாளாந்த வாழ்வில் நாம் அவதானிக்கக்கூடிய சந்தர்ப்பம்.
   1. கோடை காலத்தில் மின்கம்பி, தந்திக்கம்பி என்பன மிகவும் தளர்வாகக் காணப்படுதல்
   2. குளிரான மாரிகாலத்தில் மின்கம்பி, தந்திக்கம்பி என்பன மிகவும் தளர்வாகக் காணப்படுதல்
   3. வண்டில் சில்லுக்கு வளையம் இடும்போது மரச்சில்லானது சூடு காட்டப்படுகின்றது

27. ஒளியானது ஒலியிலும் மிக விரைவாகச் செல்லும்
   இதனை நாளாந்த வாழ்வில் அவதானிக்கும் சந்தர்ப்பம்.
   1. மின்னல் தெரிந்த பின்னரே இடிமுழக்க ஓசை கேட்டல், ஆனால் இவையிரண்டும் ஒரே நேரத்திலேயே நடைபெறுகின்றன
   2. ஓட்டப்போட்டியின்போது வெடிசுட்ட புகை தெரிந்த பின்னரே சத்தம் கேட்கிறது
   3. மேற்கூறிய (1) உம், (2) உம் சரியானவை

28. பூமியானது உருண்டை வடிவானது
   இதனை மெய்ப்படுத்தும் சான்று
   1. நாங்கள் நடமாடும்போது தலைசுற்றுதல்
   2. தூரத்தில் வரும் கடற்கப்பலின் பாகங்கள் படிப்படியாகத் தென்படுதல்
   3. நாங்கள் பிரயாணங்களை மேற்கொண்டு மீண்டும் பழைய இடத்துக்கு வந்து சேருதல்

29. பூமிக்கு ஈர்ப்பு சக்தி உண்டு
   இதனை மெய்ப்படுத்தும் ஆதாரம்,
   1. மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் ஈர்க்கப்பட்டு அன்பாக இருத்தல்
   2. மேல்நோக்கி எறியப்பட்ட பொருட்கள் யாவும் மீண்டும் பூமியை வந்தடைதல்
   3. பூமியானது எப்போதும் சூரியனைச் சுற்றிவருதல்

30. எங்கள் வீட்டு முற்றத்துத் தேசிமரத்தின் கீழ் ஈரலிப்பாக இருந்தது
   1. மழை பெய்துள்ளது
   2. கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது
   3. மழை பெய்திருக்கலாம் அல்லது நீர் ஊற்றப்பட்டிருக்கலாம்



## lock உடைக்குமா பசு

மனிதர்களுக்கு மட்டும் ஆறறிவு, மிருகங்களுக்கு ஐந்தறிவு என்னும் தத்தவத்தை மாற்றியுள்ளது. பசு என்றால் பால் கொடுக்கும் என்றுதான் நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால், புத்திசாலித்தனமாக செயற்படும் என்பதை இப்போது பார்க்கலாம். பண்ணை ஒன்றில் அடைந்து வைக்கப்பட்டிருந்த பசுக்கூட்டங்களில் ஒரு பசு மிகவும் சாதுரியமாக தனது நாக்கினால் கதவின் தாழ்பாளை தட்டி கதவை திறந்து வெளியேறியுள்ளது.

இது எமக்கு சிறு விடயமாக இருந்தாலும், ஒரு மிருகம் இவ்வாறு செயற்படும் போது ஆச்சரியமாக உள்ளதல்லவா!

## உணவாக மாறும் மலம்



மனிதக் கழிவிலிருந்து "பேர்கர் பன்" எனப்படும் உணவுப் பண்டத்திற்கான செயற்கை இறைச்சியினைத் தயாரித்து ஜப்பானிய விஞ்ஞானி ஒருவர் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார். ஜப்பானின் ஒகயாமாவில் அமைந்துள்ள சூழல் ஆராய்ச்சி நிலையத்தினைச் சேர்ந்த மிட்சுயுகி இகேடா என்ற விஞ்ஞானியே இச்சுவைமிகு உணவினை தயாரித்துள்ளார்.


மனித கழிவிலிருந்து பெறப்பட்ட புரதத்தினையும் சோயா ஆகியவற்றினையும் உபயோகித்து பல்வேறு இரசாயன மாற்றங்களின் பின்னரே இது தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த


செயற்கை இறைச்சியில் 60% புரதமும் 25% காபோஹைதரேட்டும், 9 % இயற்கை கனியுப்புகளும் அடங்கியுள்ளதாக மிட்சுயுகி தெரிவிக்கின்றார். மனிதக்கழிவினை மீள் சுழற்சி செய்யும் நோக்கத்துடனேயே இது தயாரிக்கப்பட்டுள்ளது.

மக்களிடையே ஆராய்ச்சிகளுக்காக குறித்த உணவுப்பண்டம் வழங்கப்பட்டபோது, பலர் இதனை இரசித்து உண்டதாகவும் இதன் சுவை மாட்டிறைச்சியை ஒத்திருப்பதாக அவர்கள் தெரிவித்ததாகவும் இதன் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றார்.

ஆராய்ச்சி செலவினம் காரணமாக மாட்டிறைச்சி பேர்கரை விட இதன் விலை பன்மடங்கு அதிகமென வும் எதிர்காலத்தில் விலை குறைவடையலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 31 விரல்கள்





சீனாவைச் சோந்த 6 வயதான சிறுவனுக்கு கை மற்றும் கால்களில் வழக்கமாக இருக்கும் 20 விரல்களுக்கு பதிலாக 31 விரல்கள் உள்ளன.

## மயக்க மருந்து கொடுக்காமல்

மருத்துவ உலகில் சாதனைகள் தொடர்கதையாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒரு சாதனை படைக்கப்படுகிறது. அந்த வரிசையில் இப்போது மயக்க மருந்து கொடுக்காமல் ஒபரேஷன் மேற்கொள்வது குறித்த ஆய்வில் வெற்றி கிட்டியுள்ளது. நோயாளிகளை இயல்பு நிலையில் வைத்து அவர்களின் சிந்தனைகளை சிதறடித்து கவனத்தை மாற்றி ஒபரேஷன் செய்யும் புதியமுறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. பரிசோதனை அடிப்படையில் வெற்றி கிடைத்துள்ளது என்கின்றனர் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

பெரும்பாலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த முறை பெரிதும் உதவும் என்பதும் மருத்துவத் தரப்பின் கணிப்பு. இந்த முறை விர்சுவல் ரியாலிட்டி தெரபி எனப்படும்.

அமெரிக்காவின் வொஷிங்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் புதிய கண்டுபிடிப்பு இது. புதிய முறை குறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது:

இந்த முறையில் நோயாளிகளின் முகத்தில் கண்கள் விளையாட்டை மட்டுமே பார்க்கக் கூடிய வகையில் மாஸ்க் போன்ற சாதனம் பொருத்தப்படும்.


வீடியோ கேம் விளையாடத்தெரியாதவர்களும் இதை எளிதாக கையாள முடியும். இதன் மவுஸ் அவர்கள் கைகளில் இருக்கும். முதலில் அவர்கள் கவனம் முழுவதும் விளையாட்டில் செலுத்தப்படும்.

ஒரு கட்டத்தில் அவர்கள் விளையாட்டில் ஊன்றி விடுவர். ஸ்னோ வேர்ல்ட் என்ற பெயரில் லோ இம்மர்ஷன், ஹை இம்மர்ஷன் என 2 வகை விளையாட்டுகள் உள்ளன. இந்த முறையில் ஒபரேஷனின் தன்மைக்கு ஏற்ப நோயாளிகளுக்கு வீடியோ விளையாட்டுகள் நிர்ணயிக்கப்படும். 60 வயதை கடந்த 25 பேர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். இந்த முறையில் மேற்கொள்ளப்பட்ட ஒபரேஷனால் தங்களுக்கு வலி இல்லை என்றே அவர்கள் தெரிவித்தனர்.

விர்சுவல் ரியாலிடி என்ற தெரபி முறையில் நோயாளிகளுக்கு ஒபரேஷன் மேற்கொள்ளப்படும் போது மயக்க மருந்து கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு வலி தெரியாமல் இருக்க புதிய முறையில் அவர்களின் கவனம் வேறு செயல்களில் திருப்பப்படும்.

உதாரணமாக அவர்களை வீடியோ கேம் விளையாட வைத்து அதில் அவர்கள் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடும் போது ஒபரேஷன் மேற்கொள்ளப்படும். வலியை அவர்கள் உணர்வதில்லை. ஒபரேஷன் செய்யும் நேரமும் மிகவும் குறைவு என்கிறார் ஆராய்ச்சிக் குழுவைச்சேர்ந்த மயக்க மருந்து நிபுணர் சாம்ஷரர்.

## பறக்கும் மோட்டார் சைக்கிள்






தினமும் வேலைக்குச் செல்பவர்கள் வாகன நெரிசலில் சிக்கி வாழ்க்கை வெறுத்துப் போய் மீண்டும் வீடு திரும்புவது வழமையாகி விட்டது. வெயிலில் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது மேலும் வாழ்க்கை வெறுக்கும்.

பறந்து போகக்கூடிய மோட்டார் சைக்கிள இருந்தால் எப்படி இருக்குமென அடிக்கடி தோன்றுவதுண்டு. அந்தக் கனவு இப்பொழுது நிஜமாகியிருக்கிறது. அவுஸ்திரேலியாவை சேர்ந்த கிறிஸ்மல்லோய் என்னும் பொறியியலாளர் பறக்கும் மோட்டார் சைக்கிள் ஒன்றினை உருவாக்கியிருக்கிறார்.

ஹுவர் கிறாப் படகின் தொழில் நுட்பத்தை பயன்படுத்தியே இந்த ஹுவர் மோட்டார் சைக்கிளை அவர் உருவாக்கியிருக்கிறார். "ஸ்டார்வோர்" திரைப்படங்களில் அதிக நாட்டம் கொண்ட கிறிஸ், அதில் வருகின்ற பறக்கும் மோட்டார் சைக்கிள் போன்ற தொன்றை நிஜத்தில் உருவாக்கியுள்ளார்.

## கணினி மூலை

## தரவிறக்கம் முடிந்தவுடன்

இணையத்திலிருந்து கோப்புகளைத் தரவிறக்கம் செயயும் போது சிலர் ஏதாவது தரவிறக்க மென்பொருளகளைப் பயன்படுத்துவார்கள். பெரும்பாலானோர் பயர் பொக்ஸ் உலவியைப்பயன்படுத்துபவர்கள் தரவிறக்கம் செய்யும்போது அவை பயர்பொக்சின் இயல்பான தரவிறக்க வசதியிலேயே தரவிறக்குவார்கள். சிறிய கோப்பென்றால் பிரச்சினையில்லை. பெரிய கோப்புகளைத் தரவிறக்கும்போது சிலருக்குக் காத்திருக்கப்பிடிக்காது. பயரபொக்சில் தரவிறக்கத்தை தற்காலிகமாக நிறுத்தியும் வைக்க முடியாது. தரவிறக்கம் முடியும் வரை நாமும் கணினியை அணைக்காமல் வைத்திருக்க வேண்டும்.

இந்த மாதிரி நிலைகளில் தரவிறக்கம் முடிந்தவுடன் விண்டோஸ் தானாகவே அணைத்து விடப்பட்டால் எவ்வளவு சுலபமாக இருக்கும் என நினைப்போம். இதற்கு உதவுவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு பயர்பொக்ஸ் நீட்சி தான் Auto Shutdown NG.

இந்த நீட்சியின் மூலம் பயர்பொக்சில் தரவிறக்கும் செயல் முடிந்தவுடன் கணினியை தானாகவே அணைதது விடமுடியும். இதனால் நாமும் கணினியோடு சேர்ந்து காத்திருக்கத்தேவையில்லை. இந்த நீட்சியை நிறுவிய பின்னர் Firefox Addons சென்று AutoShutdown Option இல் உங்கள் இயங்குதளத்தைத் தேர்வு செய்துவிட்டால் போதும். அடுத்து ஏதாவது ஒரு கோப்பை இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்யும்போது அதன் டவுன்லோடு மேனேஜர்(Firefox Download manager) விண்டோவின் அடியல் கணினியை அணைப்பதற்கான (Shut down) பட்டன் ஒன்று புதியதாக வந்திருக்கும். இதனை ஒருமுறை கிளிக் செய்தால் இது சிவப்பு நிறத்தில் மாறிவிடும். உங்களுக்கு தரவிறக்கம் முடிந்தவுடன் கணினியை அணைக்க வேண்டு மென்றால் ஒருமுறை கிளிக் செய்தால் போதுமானது. கணினியை அணைக்க வேண்டாம் என்றால் மீண்டும் அந்த பட்டனையே கிளிக்செய்ய வேணடும். பின்னர் நீங்கள் உங்கள் வேலையைச்செய்யலாம். எல்லா கோப்புகளும் தரவிறக்கி முடிந்தவுடன் இந்த நீட்சி கண்டறிந்து கணினியை அணைத்து விடும். தரவிறக்கம் முடிந்தவுடன் கணினியை அணைக்கப் போவதற்கு முன் ஒரு அறிவிப்பு வரும். நீங்கள் கணினியை தொடர்ந்து பயன்படுத்தவேணடும் எனில் அதனை கேன்சல் செய்தால்போதும் கணினி அணைக்கப்படுவது நிறுத்தப்படும். பெரிய அளவிலான கோப்புகளை இரவுநேரத்தில் தரவிறக்க இந்த நட்சி பயனுள்ளதாக இருக்கும்.


தரவிறக்க சுட்டி:-
https://addons.mozilla.org/en-US/firefox/addon/auto-shutdown-ng/?src=api

# தமிழ் மக்கள் சகல உரிமைகளுடனுடம் வாழ முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன

## அமைச்சர் வாசன் தெரிவிப்பு

(சென்னை)

**இலங்கையில் சிங்கள மக்கள் அனுபவிக்கும் உரிமைகள், மற்றும் பாதுகாப்பினை, தமிழர்களும் பெற்று வாழும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கப்பல் போக்குவரத்துதுறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,**



இலங்கை தமிழர்களின் நலனைக் காப்பதற்காக, தமிழக சட்டமன்றத்தில் இலங்கைக்குப் பொருளாதார தடைவிதிக்கக் கோரும் தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேறியது. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு அளித்தனர். மேலும் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா, இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து கோரிக்கை மனு அளித்துள்ளார்.

இலங்கை தமிழர்களின் நலனுக்காக மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது. இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக நிதி உதவி உள்பட பல்வேறு உதவிகளையும் மத்திய அரசு அளித்து வருகிறது. இலங்கையில் சிங்கள மக்களுக்கு இணையான உரிமைகளுடனும், பாதுகாப்புடனும் தமிழர்கள் வாழ உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மத்திய நிதிமந்திரி பிரணாப் முகர்ஜியும் இதற்காக இலங்கை சென்று பேச்சுவார்த்தை நடத்தினார். கடந்த சில நாட்களுக்கு முன்பு கூட, சிவ்சங்கர்மேனன் இலங்கைக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கை தமிழர்களின் மறுவாழ்வுக்காகவும், உரிமைக்காகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தியா - இலங்கை இடையே கப்பல் போக்கு வரத்து என்பது, தமிழர்களின் நூற்றாண்டு கனவு. கடந்த பெப்ரவரி, மார்ச் மாதத்திலேயே கப்பல் போக்குவரத்தை தொடங்க திட்டமிடப்பட்டு இருந்தது. லிபியா போரின் காரணமாக அங்கு தவித்த இந்தியர்களை மீட்டு தாய்நாட்டுக்கு கொண்டுவருவதில் இந்தக் கப்பல் பயன்படுத்தப்பட்டதால் தாமதம் ஏற்பட்டது. தற்போது தான் இலங்கை - இந்தியா இடையே கப்பல் போக்கு வரத்து தொடங்கப்பட்டுள்ளது.

விமானக் கட்டணம் கூடுதலாக இருப்பதால் நடுத்தர மக்களுக்கு சிரமத்தை அளிக்கிறது. இந்தியா - இலங்கை கப்பல் போக்குவரத்து மூலம் நடுத்தர மக்களுக்கும், இருநாட்டு தமிழர்களுக்கும் நன்மை கிடைத்து வருகிறது

## இன்று விசாரணை

(புதுடில்லி)

**2 ஜிஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் கைதாகி திகார் சிறையில் இருக்கும் கனிமொழி மற்றும் கலைஞர் ரி.வி நிர்வாக இயக்குனர் சரத்குமார் ஆகியோரின் ஜாமின் மனுக்கள் உச்ச நீதிமன்றில் இன்று விசாரணைக்கு வருகிறது. கனிமொழிக்கு பிணை வழங்கக் கூடாது என்று சி.பி.ஐ.தரப்பு எதிர்ப்புத்தெரிவித்து வருகிறது. வழக்கை விசாரித்து வரும் நீதிபதிகள் சதாசிவம், பட்நாயக் ஆகியோர் வழக்கிலிருந்து விலகுவதாக** தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இவ்வழக்கு நீதிபதி சவுகான் தலைமையிலான பெஞ்ச் முன்னிலையில் நாளை விசாரணைக்கு வருகிறது.

## இந்தியச் செய்திகள்

# தயாநிதி மாறன் மீது விசாரணை நடத்த சி.பி.ஐக்கு பிரதமர் அனுமதி அளிப்பு?



(புதுடில்லி)

2-ஜி அலைக்கற்றை விவகாரத்தில் சிக்கியுள்ள மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதி மாறனிடம் சி.பி.ஐ. விசாரணை நடாத்த பிரதமர் அனுமதி அளித்துள்ளதாக பிரதமர் அலுவலக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது. இதைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் பதவியிலிருந்து அடுத்த வாரம் அவர் ராஜிநாமா செய்வார் என டில்லி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

2-ஜி விவகாரத்தில் ஏர்செல் நிறுவனத்திற்கு சாதகமாக நடந்து கொண்டதாக தயாநிதி மாறன் குறித்து சர்ச்சை எழுந்துள்ளது. மேலும் அரசு நிறுவனமான பி.எஸ்.என்.எல். தொலைபேசி இணைப்புகளை அவர் தவறாகப் பயன்படுத்தியதாக எழுப்பப்பட்ட பழைய சர்ச்சை இப்போது மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

ஏர்செல் விவகாரம் தொடர்பாக அதன் முன்னாள் தலைவர் சிவசங்கரன் கொடுத்துள்ள சாட்சியத்தின் அடிப்படையில், முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்ய சி.பி.ஐ. தயாராகி விட்டது. இது தொடர்பாக பிரதமருக்கும் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

தயாநிதி மாறனை விசாரிக்க, பிரதமரின் அனுமதி பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சி.பி.ஐ. ஏற்கெனவே மேற்கொண்டிருந்தது.

இந்த நிலையில், தயாநிதி மாறனிடம் சி.பி.ஐ. விசாரணை மேற்கொள்வது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் இல்லத்தில் நடைபெற்ற உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, விசாரணை நடத்துவதற்கு பிரதமர் அலுவலகம் சி.பி.ஐ.க்கு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

தயாநிதி மாறனை மத்திய அமைச்சர் பதவியிலிருந்து நீக்க காங்கிரஸ் தலைமையும் ஏற்கெனவே அனுமதி அளித்துள்ளதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்நிலையில் தயாநிதி மாறன் தானாகவே பதவியிலிருந்து விலக வேண்டும், அவ்வாறு விலக முன்வராவிட்டால், பிரதமர் அவரை மத்திய அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் போர்க்கொடி எழுப்பியுள்ளனர்.

பிரதமர் இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடரை முடக்கப் போவதாக எதிர்க் கட்சிகள் மிரட்டி வருகின்ற நிலையில், தயாநிதி மாறன் மீது சி.பி.ஐ. நடவடிக்கை எடுப்பது உறுதி என்று தலைநகரில் அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர்.

உரிய நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடரை முடக்கப் போவதாக எதிர்க்கட்சிகள் மிரட்டி வருகின்ற நிலையில், தயாநிதி மாறன் மீது சி.பி.ஐ. நடவடிக்கை எடுப்பது உறுதி என்று தலைநகரில் அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர்.

# ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் எந்த மேடையிலும் இருப்பாராம் சத்தியராஜ்

(சைதாப்பேட்டை)

ஈழத்தமிழ் மக்களுக்காக குரல்கொடுக்கும் 'எந்த மேடையிலும் தான் இருப்பாரென நடிகர் சத்தியராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு,பாராட்டும், நன்றி தெரிவிக்கும் வகையில் நாம் தமிழர்கட்சி சார்பாக சைதாப் பேட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நடிகர் சத்தியராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,


நடிகர் சதயராஜ் பேசும் போது, நான் எந்தக் கட்சியைச் சேர்ந்தவனும் அல்ல.

ஆனால் எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்களிடம் கேட்டால் ஒரு உண்மையை ஒப்புக்கொள்வார்கள். அது புரட்சித் தலைவி அம்மாவின் தைரியம் வேண்டும்.

ஒரு விசயத்தை செய்யனும் என்று முடிவெடுத்துவிட்டால் அதைச் செய்தே தீருவார். அந்த அம்மாவின் தைரியம் யாருக்கும் வராது.

நான் இந்த நாம் தமிழர் மேடையில் ஏன் ஏறியிருக்கிறேன் என்று நினைப்பீர்கள். நாம் தமிழர் மேடை மட்டுமல்ல. ஈழ மக்களுக்காக குரல் கொடுக்கும் எந்த மேடையிலும் நான் இருப்பேன்.

ஈழப்பிரச்சினைக்கு மட்டும் ஏன் தொடர்ந்து குரல் கொடுக்கிறீர்கள் என்று எல்லோரும் என்னிடம் கேட்கிறார்கள்.




அவர்களுக்கு சொல் கிறேன். மற்ற பிரச்சினைகளைப் பேச நிறைய அமைப்புகள் இருக்கின்றன.

ஆனால் ஈழ மக்களுக்கு குரல் கொடுக்க சில அமைப்புகள் தான் இருக்கின்றன. அதனால்தான் அந்த சில அமைப்புகளோடு கைகோர்த்திருக்கிறேன் என்று பேசினார். இந்தக் கூட்டத்தில் சீமான், மணிவண்ணன் ஆகியோரும் உரையாற்றினர்.

# தமிழக மீனவர் பிரச்சினை தீர கச்சதீவை மீட்பதே ஒரேவழி!

## கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

(சென்னை)

தமிழக மீனவர் பிரச்சனைக்கு, நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு சிறந்த வழி, கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்பதேயாகும் என தமிழக மக்களில் பெருமளவானோர் தெரிவித்துள்ளனர்.

லயோலா கல்லூரி சார்பாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில், கச்சத்தீவை மீட்கக் கோரும் வழக்கில் தமிழக அரசும் இணைந்துகொள்ளச் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை 62.9 சதவீதமானோர் வரவேற்றுள்ளனர்.

கச்சத்தீவை மீட்பதால் மட்டும் மீனவர் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை என 22.0 சதவீதமானேரும், இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப் பாட்டை மத்திய அரசு மாற்றிக் கொள்ளாமல் இத்தகைய தீர்மானங்களால் எந்தப் பயனும் இல்லை என 12.6 சதவீதமானோரும் தெரிவித்துள்ளனர்.

தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாகப் பெரும்பாலோர் முன்வைப்பது கச்சதீவை மீட்பதாகும்.

கச்சதீவை மீட்பது என 45.8 சதவீதத்தினரும், இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாட்டுக்கு வருவது என 25.0 சதவீதத்தினரும், நமது கடற்படைப் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என 21.3 சதவீதத்தினரும், மீனவர்கள் மாற்றுத் தொழில்களைக் கற்றுக் கொள்வது என 2.5 சதவீதத்தினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# சிறந்த கவிதைத் தொகுப்புக்கான விருது மனுஷ்யபுத்திரனின் "அதீதத்தின் ருசி"க்கு கிடைத்தது



(சென்னை)

மனுஷ்ய புத்திரனின், அதீதத்தின் ருசி கவிதைத் தொகுப்புக்கு கனடா நாட்டின் தமிழ் இலக்கியத் தோட்டத்தின், சிறந்த கவிதைத் தொகுப்புக்கான விருது கிடைத்துள்ளது.

மனுஷ்ய புத்திரன், உயிர்மை பத்திரிகை ஆசிரியர். 20 ஆண்டு களாக இலக்கியப் பணியில் உள்ளார். ''அதீதத்தின் ருசி'' கவிதைத் தொகுப்பின் சில பகுதிகள், ஈழப்போர் படுகொலை கோரங்களை சித்தரிக் கின்றன. எட்டு கவிதைத் தொகுப்புகள், மூன்று கட்டுரை தொகுப்புகளை மனுஷ்ய புத்திரன் வெளியிட்டுள்ளார். விருது குறித்து மனுஷ்ய புத்திரன் கூறியதாவது: மிகச் சிறந்த கவிதைத் தொகுப்புகளுக்கே, கனடா நாட்டின் தமிழ் இலக்கியத் தோட்ட விருது கிடைக்கிறது. அந்த வகையில், சர்வதேச அங்கீகாரம் எனக்குக் கிடைத்துள்ளது. தொடர்ந்து கவிதைகள் படைக்க இந்த விருது ஊக்கம் அளிக்கிறது. உயிர்மை பதிப்பகம் வெளியிட்ட கருணாகர மூர்த்தியின், "பதுங்கு குழி" சிறுகதைப் பிரிவிலும், தியோடர் பாஸ்கரனின், "இன்னும் பிறக்காத தலைமுறைக்காக..." நூல் கட்டுரைப் பிரிவிலும், வெங்கடேசனின், "காவல் கோட்டம்" நாவல் பிரிவிலும் பரிசு பெறுகின்றன. ஈழத்துக் கவிஞர் சச்சிதானந்தம் சுகிர்தராஜா மற்றும் திருமாவளவன், முத்துநெடுமாறன், சிரோதி ராமச்சந்திரன் ஆகியோரும் பரிசு பெறுகின்றனர். வாழ்நாள் சாதனைக்கான இயல் விருது இந்த ஆண்டு,பொன்னுத்துரைக்கு வழங்கப்படுகிறது என்றார்.

# பின்லேடனுக்கு எதிரான வழக்குகளை கைவிட்டது அமெரிக்க புலனாய்வுத்துறை

(வொஷிங்டன்)

ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அவருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த பயங்கரவாத குற்ற வழக்கை அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் விலக்கிக்கொண்டனர். கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி அமெரிக்கா மீது அல் கொய்தா தீவிரவாதிகள் பயங்கரத் தாக்குதலை நடத்தினர். இதில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதையடுத்து அல் கொய்தா தலைவரும் சர்வதேச பயங்கரவாதியுமான ஒசாமா பின்லேடன் மீது அமெரிக்க கூட்டாட்சி புலனாய்வுத் துறை அதிகாரிகள் பயங்கரவாத சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்தனர். கடந்த 10 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த பின்லேடன் கடந்த மே மாதம் 2ஆம் திகதி பாகிஸ்தானில் உள்ள அபோதாபாத் என்ற இடத்தில் அமெரிக்க அதிரடிப்படை வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதையடுத்து அமெரிக்காவில் பின்லேடனுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டிருந்த வழக்குகள் கைவிடப்பட்டு விட்டதாக அமெரிக்க கூட்டாட்சி புலனாய்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒசாமா பின்லேடனுக்கு எதிராக நியூயோர்க் நகரில் உள்ள மன்ஹாட்டன் என்ற இடத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இருந்தது. இப்போது பின்லேடனே கொல்லப்பட்டு விட்டதால் இந்த வழக்கு விசாரணையை இத்துடன் முடித்துக்கொள்வதாக அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கொல்லப்பட்டது ஒசாமா பின்லேடன் தான் என்பது எப்படி அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது என்பது குறித்த விபரங்களை அமெரிக்க புலனாய்வுத் துறை அதிகாரிகள் நியூயோர்க் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர். அதாவது ஒரு வழக்கை முடித்துக் கொள்ள அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் இறந்துவிட்டார் என்பதை உறுதி செய்வதற்கான அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் இந்த அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. ஒசாமா பின்லேடனின் குடும்பத்தினர் மரபணு சோதனை முடிவுகளை வைத்து கொல்லப்பட்டது பின்லேடன்தான் என்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் பின்லேடன் குடும்பத்தினரின் முகச்சாயல், தடயவியல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டும் இறந்தது பின்லேடன்தான் என்பது உறுதி செய்யப்பட்டது என்று அந்த நீதிமன்றில் அமெரிக்க புலனாய்வுத் துறை அதிகாரிகள் தங்களது அறிக்கையில் கூறியிருந்தனர்.

உலகச் செய்திகள்

# அணு உலையிலுள்ள நீரைச் சுத்தப்படுத்த திண்டாடிவரும் ஜப்பான் அதிகாரிகள்

(டோக்கியோ)

ஜப்பானில் சுனாமி மற்றும் நிலநடுக்கத்தால் பாதிப்புக்குள்ளான புகுஷிமா அணு உலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் சிக்கல் நீடிக்கிறது.

புகுஷிமா அணு உலையில் கடந்த வெள்ளிக்கிழமை அணுக் கதிர் வீச்சினால் பாதிப்புக்குள்ளான நீரை சுத்தப்படுத்தும் பணி துவங்கியது. இந்த நீரை சுத்தப்படுத்தும் இயந்திரத்திலுள்ள ஓர் அமைப்பு அணுக் கதிர் வீச்சினால் பாதிப்புக்குள்ளான நீரிலுள்ள சீசியம் அணுப் பொருளை உறிஞ்சும் தன்மையுடையது.

வேலை செய்ய ஆரம்பித்த மணி நேரத்துக்குள்ளாகவே இந்த அமைப்பு தனது அதிகபட்சத் திறனை அடைந்துவிட்டதால் முழுமையாக நீரை சுத்தப்படுத்த முடியவில்லை என அணு உலையைப் பராமரிக்கும் டோக்கியோ மின் கார்ப்பரேஷனின் அதிகாரி ஜுனிச்சி மட்ஸ்மோட்டோ தெரிவித்தார். கதிர்வீச்சுக்குள்ளான நீரை சுத்தப்படுத்தும் பணி மீண்டும் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது தெரியாது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் 11ஆம் திகதி சுனாமி மற்றும் நிலநடுக்கத்தால் பாதிப்புக்குள்ளான 'புகுஷிமா அணு உலையை குளிர்விக்க உபயோகப்படுத்தப்பட்ட 1,00,000 தொன்னிற்கும் மேற்பட்ட நீர் கதிர்வீச்சு பாதிப்புக்குள்ளானது.

இதில் சிறிதளவு நீர் கடலுக்குள் செலுத்தப்பட்டது. மீதமுள்ள நீரை மீண்டும் அணு உலையைக் குளிர்விக்கவோ அல்லது வேறு பயன்பாட்டுக்கு மறுசுழற்சி செய்யவேண்டுமானால் அதிலிருக்கும் கதிர் வீச்சு நீக்கப்பட வேண்டும். இல்லையெனில் அந்நீர் அணு உலையின் குளிர்விப்பு அமைப்பை பாதிக்கும்.

## குளோரின் வாயுக்கசிவால் சீனாவில் 27 குழந்தைகள் பாதிப்பு

(பீஜிங்)

சீனாவில் குளோரின் வாயுக் கசிவால் **பள்ளிக்குழந்தைகள்** 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவின் தென்மேற்கு பகுதியான குயிஸ்கோவ் மாகாணத்தில் உள்ள டைட்டானியம் தொழிற்சாலை உள்ளது.

இந்த தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய குளோரின் வாயுக் கசிவு காரணமாக அப்பகுதியில் படித்து வந்த குழந்தைகளுக்கு வயிற்று வலி மற்றும் நெஞ்சு வலி ஏற்பட்டது.


பாதிக்கப்பட்ட குழந்தைகள் அனைவரும் அருகில் உள்ள மூன்று மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.



விசாரணையில் தொழிற்சாலையில் உள்ள கருவிகளின் பழுது காரணமாக வாயுக் கசிவு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்நிறுவனம் சுற்றுச்சூழல் துறை மூலம் மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க அரசு தலைமையில் தலிபான்களுடன் பேச்சுவார்த்தை

## ஆப்கான் ஜனாதிபதி தெரிவிப்பு



(காபூல்)

அமெரிக்க அரசாங்கம் தலிபான்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவருவதாக ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இந்த வருடம் இப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இப்பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பேச்சுவார்த்தைகளுக்கு அமெரிக்காவே தலைமை தாங்குகின்றது எனக்குறிப்பிட்ட அவர் இப்பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் அமெரிக்க மற்றும் தலிபான் பிரதிநிதிகள் பற்றிய எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை.

இதேவேளை தலிபான் ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்த சில மணி நேரத்தில் தலிபான்கள் காபூரில் தாக்குதலை நடத்தியுள்ளதாக ஆப்கான் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இத்தாக்குதலில் ஐந்து பொதுமக்கள், மூன்று பொலிஸார், ஒரு புலனாய்வ அதிகாரி உட்பட ஒன்பதுபேர் உயிரிழந்துள்ளதுடன், 10 பொதுமக்கள் இரு பொலிஸார் உட்பட 12பேர் காயமடைந்துள்ளனர்.

தலிபான் அமைப்பைச் சேர்ந்த மூன்று தற்கொலை குண்டுதாரிகளே இத் தாக்குதலை நடத்தியதாக ஆப்கான் அரசு மேலும் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை தாமே நடத்தியதாக தலிபான்கள் உரிமை கோரியுள்ளனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

**சி**னிமா இங்கு கேளிக்கைப் பொருளாகவும், வியாபாரப் பண்டமாகவும்தான் இருக்கிறது. அது கலை, நுண்ணுணர்வைக் கூர்தீட்டும் கலை, மனித ஆத்மாவோடு உறவாடும் கலை, சமூக விழுமியங்களை முன்னிறுத்தும் கலை என்று பெரும்பாலோருக்குச் சொல்லிக்கொடுக்கப்படவில்லை. பராக்குப் பார்க்கும் சின்னப் பையன்களின் மனோபாவத்தைத் தாண்டிப் பெரும்பாலான தமிழ் சினிமாக்கள் வெளிவரவில்லை.

-- பிரபஞ்சன்.

**பெ**ண்ணின் உடலைச் சுரண்டியபடியே தமிழ்ப் பெண்மையைப் போற்றும் பண்பாடு நம் சினிமாப் பண்பாடு. தமிழ் சினிமாவிலும், தொலைக்காட்சிகளிலும் பெண்கள் தாலிப்பிச்சை கேட்டுத் தினந்தோறும் கதறிக் கொண்டே இருக்கிறார்கள்.

-- கண்ணன்.

**த**மிழ்ப்படங்கள் பார்க்க வேண்டுமென்றால் தியேட்டர் போய்வர ஒரு விடுமுறை நாளைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்தளவு தியாகத்துக்கு அவை அருகதை உள்ளவையாக இல்லை.

-- அசோகமித்திரன்.

**ச**த்யஜித்ரேயின் பதேர் பாஞ்சாலி, சாருலதா, மஹாநகர், லெஸ்டரின் பல படங்கள், செக்கோஸ்லவாக்கியா, ஹங்கேரி, யூகோஸ்லாவியா திரைப்பட விழாக்களில் பார்த்த பல படங்கள் சினிமா என்ற கலையை நம்மவர்கள் எவ்வளவு சிறுமைப்படுத்துகிறார்கள் என்பதை எனக்கு கற்றுத் தந்தன. ஆனால் நான் இப்போதும் தமிழ் படங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். சில கெட்டபழக்கங்கள் சுடுகாடு வரை தொடரும் போலும்.

-- உமா வரதராஜன்.

**அ**வன் ரசிப்பது திரைப்படத்தை மட்டுமல்ல, அதன் வழியாக அவன் தன் மனதில் ஒளிந்திருந்த ஒரு ஆசையைக் கண்டுபிடித்து விடுகிறான். திரையரங்கம் மனிதர்களின் அடக்கப்பட்ட கனவுகளை மீட்டு எடுக்கிறது. தன்னைச் சுற்றியுள்ள இருளில், திரையில் தெரியும் கதாபாத்திரங்கள் மனதிற்குள் வருவதற்காக மனதின் இரகசியக் கதவுகளைத் திறந்துவிட்டுக் காத்திருக்கிறான். திரைநாயகர்கள் மனதில் பிரவேசிக்கிறார்கள். பின் நெடுநாட்கள் வெளியேறுவதேயில்லை. கற்பனா கதாபாத்திரங்களோடு ஏற்பட்ட காதல் முடிவற்று நீளக்கூடியது.

- எஸ். ராமகிருஷ்ணன்.

**ப**டைப்பை ரசிப்பவன் ஏன் அந்தப் படைப்பை ரசிக்கிறான்? ஒரு குறிப்பிட்ட படைப்பை ரசிப்பதன் மூலம், எதனை வெளிப்படுத்துகிறான்? என்பது முக்கியமான கேள்வி.

ஏன் ஒரு சில படங்கள் வெற்றிப் படங்களாகின்றன?

எங்கே மனிதன் தன்னைக் காண்கிறானோ அந்தப் படங்கள் வெற்றி பெறுகின்றனவா? இல்லை. அப்படியானால் பெரும்பாலான கலைப்படங்கள் வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஒருவன் டீக்கடையில் உட்கார்ந்து அரைமணி நேரம் டீ குடிப்பதைக் காட்டும் கலைப்படங்கள் அந்த மனிதனின் வெறுமை, வேலையின்மை ஆகியவற்றையும், ஒருவன் பீடி குடிக்கும்போது விடும் புகைக்குள் அலையும் கமெரா, மனக்குழப்பத்தையும் காட்டுவதாக வியாக்கியானம் செய்தாலும், அவனைத்தானே காட்டுகின்றன? அவை வெற்றி பெற்றிருக்க வேண்டுமே? இல்லையே?

எங்கே ஒரு மனிதன் தன் ஆதர்சத்தைக் காண்கிறானோ, அவை வெற்றி பெறுகின்றன.

-- இரா. மதுவந்தி.

**த**மிழ் சினிமாக்காரர்கள் ஒரு ரென்வார், ஒரு கோடார்ட், ஒரு பிரஸோன் படத்தைப் பார்த்துவிட்டுத்தான் தமிழில் ஒரு படம் பண்ண வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. மேலை நாட்டுச் செடிகளைப் பிடுங்கிக்கொண்டுவந்து இங்கே நட்டு வளர்த்து இவர்கள் நஷ்டம் அடைய வேண்டாம். ஷேக்ஸ்பியரை நமக்குத் தெரியும். காதல், காமம், நீண்ட வசனங்கள், பாட்டுகள் ஏறக்குறைய நம் தமிழ் ரசிகர்கள் கேட்டு அடம்பிடிக்கும் மிட்டாய்கள் எலந்த வடைகள்தான். அவர்கள் கேட்டதையெல்லாம் போட்டு, ஆனால் அவற்றையெல்லாம் அர்த்தத்தோடு ஆழத்தில் ஒரு அரிய தரிசனத்தில் கலந்துவிட்டார். விளைவு ஒரு வண்ண மிக்க, ஆழமான, அழுத்தமான கனமான செறிவுள்ள ஒரு காவிய நாடகம். இப்படி நாமும் தமிழ் சினிமாவில் வெற்றிக்குத் தேவையான சரக்கனைத்தையும் உள்ளடக்கி அர்த்தபுஷ்டியான படைப்புகளைச் செய்யலாமே? தயவுசெய்து ஷேக்ஸ்பியர் ஒரு மேதை என்று சொல்லிவிட்டுத் தூங்கப் போய்விடாதீர்கள்.

-- எஸ். ஆல்பர்ட்.

# கற்க கசடற

அருண் நரசிம்மன்



ஒரு ஓய்வு நாளில், சாய்நாற்காலியில் கிடந்து, என்னைச் சுற்றி இயங்கும் ஊடகங்கள், பொருட்கள் சிந்தனைகளை வைத்து பத்து நிமிடத்தில் என்னால் எழுப்ப முடிந்தவை இந்தக் கேள்விகள். எனது நல்வாழ்விற்கு பதில் தேவையான கேள்விகளின் தொகுப்பு.

அணுக்கரு உலைகள் ஆபத்தா? ஜப்பானில் பழுதடைந்த அணுக்கரு உலையிலிருந்து வெளிப்பட்டிருக்கக்கூடிய கதிர்வீச்சினால் எவ்வளவு பேர் இறந்தார்கள்? விபத்திற்கு காரணகர்த்தாவான சுனாமியால்? சாலை விபத்துகளிலும் சிகரெட் புகையிலும் இறப்பவர் எண்ணிக்கையைவிட உலகில் அணுக்கரு உலையிலிருந்து வெளிப்படும் கதிரியக்கம் நேரடியாகத் தாக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமா? கதிர்வீச்சில் மனிதனுக்கு பாதுகாப்பான அளவு என்பதே இல்லை என்பது சரியா? கதிர்வீச்சு உற்பத்தியாகுமிடத்திலிருந்து பாதிப்பிற்கான தூரம் என்பதே பொருட்டில்லையா? அணுமின் நிலையத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் குழந்தைகளின் ஊனத்திற்கு கதிர்வீச்சுத்தான் காரணமா? முதல்கட்ட நிருபணமாக, கதிர்வீச்சு அண்டாத ஏனைய கிராமங்களைக்காட்டிலும், சுற்றியுள்ள கிராமங்களில் குழந்தைகளின் ஊனம் மிகுதியாக இருப்பதன் ஆதாரம் இருக்கிறதா? அடுத்து, கதிர்வீச்சினால்தான் இவ்வகை ஊனம் மனிதனுக்கு ஏற்படும் என்பதற்கான மருத்துவ நிரூபணம், நமக்கு கிடைத்துள்ளதா? அணுக்கரு கதிர்வீச்சு, தெய்வம்போல், நின்று கொல்கிறதா?

எவ்வகை கதிரியக்கமும் இவ்வகையில் மனிதனுக்கு தீங்கா? வெய்யில்? டியூப் லைட் ஒளி? டி.வி? மடிக் கணினியின் திரையொளி?

நுளம்புச்சுருளின் புகையை சுவாசித்தா நுளம்பு இறக்கிறது? சுவாசிக்க நுளம்பிற்கு மூக்கு உண்டா? நுளம்பின் கண்களுக்கு புகை எப்படி, எந்த உருவில் தெரியும்? அப்புகையை சுவாசிக்கும் நமக்கும் தீங்கா? எவ்வளவு சுவாசிக்கலாம் என்று எப்படித் தெரிந்துகொள்வது?

ஸ்ப்ளிட் ஏஸிக்கும் சாதாரண ஏஸிக்கும் என்ன வித்தியாசம்? ஸ்ப்ளிட் ஏஸி மூடிய அறையினுள் இருக்கும் காற்றையே சுற்றிச் சுற்றி குளிரச்செய்கிறதா? அறையின் காற்று எந்த வெப்பநிலையில் இருக்குமாறு ஏஸியை வைக்கலாம்? நம் உடம்பிற்கு தோதான அறை வெப்பநிலை அளவு உள்ளதா?

எண்டோசல்.ஃ.பான் பயிர்களுக்குத் தேவையா? மக்களுக்கு ஆபத்தா? செல்போன் பெருகியதால் சிட்டுக்குருவி அருகிவிட்டதா? தேனீக்களுக்கும் ஆபத்தாமே? நம் மூளையை செல்போன் கதிர்வீச்சு பாதிக்கிறதா? செல்போனில் பதியப்பட்டுள்ள தொடுதிரை எப்படி இயங்குகிறது? தொட்டால் ஏன் ஷொக் அடிப்பதில்லை? இதன் வழியே பின்னால் இருப்பதும் தெரிகிறதே, என்ன பொருள் இது?

பனடோல் மாத்திரைக்கு தலைவலி இருக்கும் இடம் எப்படித் தெரிகிறது? நாய்க்குட்டிக்கும் தலைவலிக்குமா? பனடோல் ஒத்துக்கொள்ளுமா? வெயில் காலத்தில் வெள்ளைச் சட்டை அணிந்தால் உடலுக்கு குளிர்ச்சியா? பின் ஏன் முஸ்லிம் பெண்கள் 'அரபு பாலைவனப் பகுதியில்' சிலர் கறுப்பு உடை அணிகிறார்கள்? மதக்காரணம் தாண்டிய அறிவியல் காரணம் உள்ளதா? வயதானதும் நம் தலைமுடி நரைப்பதும், கொட்டிவிடுவதும் வெயில் காலத்திய உடல் குளிர்ச்சியுடன் தொடர்பு இருக்குமோ?

வெள்ளிக்கிழமை என்று பாம்புப் புற்றுக்கு பால் தெளிக்கிறார்களே, பாம்பு பால் 'குடிக்குமா? பின் ஏன் குட்டிகளுக்கு பாலூட்டும் வகையில் அவைகள் இயற்கையில் சிருஷ்டிக்கப்படவில்லை? பாம்பிற்கு பால் கொடுப்பதால் நமக்கு நேரடியாக என்ன பயன்? அப்பயனை உண்மை என்று சந்தேகங்களை நிவர்த்திசெய்து நம்பும்படி எப்படி நிரூபிப்பது? வாசலில் எதற்கெடுத்தாலும் தலையாட்டுகிறதே பூம் பூம் மாடு பாவற்காய் சாப்பிடுகிறாயா என்று கேட்டால் என்ன சொல்லும்?

சிந்தையோடையாக தொடுக்கப்பட்டுள்ள இக்கேள்வித்தொகுப்பின் பதில்களை இங்கு விவாதிக்கப் போவதில்லை. சார்பாக மற்றொரு கேள்வியும் அதன் விடைக்கான வாதங்களையே இக்கட்டுரைச் சிந்தையாக்குகிறேன்.

என் பள்ளிக்கூட மற்றும் கல்லூரியில் நான் படித்த அறிவியல் (சார்ந்த) பாடங்களைவைத்து, மேலே கேள்வித்தொகுப்பிலுள்ள ஒரு சாதாரண தினத்தில், சாதாரண சிந்தையில், சாதாரணமாக நமக்குத் தோன்றும் கேள்விகளுக்கான விடைகளை என்னால் காண முடியுமா? உங்களால்?

கல்லூரியில் அறிவியல் சார்ந்த துறையில் படிக்கவில்லை என்றால், பத்தாம் வகுப்புவரை படித்த அறிவியலை வைத்து எவ்வளவு கேள்விகளுக்கு விடை காண இயலும்? அநேக கேள்விகளுக்கு விடை காண முடியாது என்றால், ஏன்? நாம் படித்தவர்கள் என்றால் என்ன பொருள்?

பயின்ற அறிவியல் பாடங்களின் உபயோகம் மேலுள்ள கேள்விகளுக்கு கேட்ட மாத்திரத்தில் அறிவியல் தெளிவுரையுடன் நமக்குத் விடை தெரிந்துவிடவேண்டும் என்பதல்ல. அந்த கேள்விகள் பலவற்றிற்கு விடைகளை முறையாக அணுகுவதற்கே பல தகவல்கள் தேவை. அதைவிட முக்கியமாக, சில கேள்விகளுக்கு ஒரே சரியான விடை என்பதே இருக்கத் தேவையில்லை என்கிற புரிதல்.

பல வருடங்களாய் கல்வி என்று பயின்ற அறிவியல் பாடங்கள், முதலில் நம்மை இவ்வகை கேள்விகளை இயல்பாய் (நமக்குள்) கேட்கச்செய்ய வேண்டும். அறிவியல் சிந்தையுடன் பதில்களை அணுகும் மனநிலையை வளர்த்திருக்க வேண்டும். தற்காலிகமாக கிடைக்கும் பதில்களை ஆராய்ந்து சரிபார்க்கும் பகுத்தறிவை வளர்த்திருக்க வேண்டும். படித்த அறிவியலின் தகவல்களை மறந்திருக்கலாம். அறிவியலின் நோக்கை உணர்ந்து மனதில் ஊறி நிலைத்திருக்கவேண்டும். அறிவியல் கல்வி, அனுபவக் கல்வியாகாமல் போகலாம். அனுபவத்திற்கு வேண்டிய கல்வியை சிந்தையை கொடுக்க முடியாமல் ஏட்டுச்சுரைக்காயாக நின்றுவிடக்கூடாது.

தனிமனிதன் படித்திருந்தும், கல்வியறிவு தந்திருக்கவேண்டிய தீர்க்கமும் மனத்திடமும் வளராமல் படித்தால் மட்டும் போதுமா என்று வாழ்வின் பல தருணங்களில் எள்ளலுக்குள்ளாகும் நிலைக்கு பல காரணங்கள் கூறலாம்.

கி.மு. காலத்தில் அலெக்ஸாண்ட்ரியாவில் தொலமி ஆள்கையில் (மகா அலெக்ஸாண்டரின் மூன்று தளபதியருள் ஒருவர்), யூக்ளிட் ஜியோமிட்ரியின் கோட்பாடுகளை நிறுவினார். அவரிடம் கணித கல்வி கற்க வந்த பலரில் ஒருவன், 'நீங்கள் கண்டு, விளக்கும், இந்த வடிவவியலை கற்பதால் என்ன பயன்?' என்று கேட்க, அவர் உடனே அருகிலிருந்த மாணவனிடம் தன்வீட்டினுள்ளே சென்று ஒரு பிடி பொற்காசுகளைக் கொண்டுவந்து கேட்டவனிடம் கொடுக்கச்சொன்னாராம். அப்பனே, உனக்குத் தேவையானதைக் கொடுத்திருக்கிறேன், போய்வா.

அறிவியலோ, கணிதமோ, இன்ன பிற அறிவுத்துறையோ, அவற்றின் கல்வி என்பது பொருளீட்டுவதற்கு அல்ல என்பது பண்டைய வாழ்வியல் சிந்தனையின் அடிநாதம். பிச்சை புகினும் கற்கை நன்றே என்று நம் மூதாட்டி கூறியதும் பொருளீட்டும் கல்வியையல்லவே.

படித்தால் பொருளீட்டும் வேலை என்கிற கூற்று இன்றளவும் தொழில்நுட்பக் கல்வியையே வளர்க்கிறது. முற்பகல் உழைத்தால் பிற்பகல் ஊதியம் என்பதை யொத்த இந்த சமீபகால சிந்தையில் மேலோட்டமாக தவறில்லை. ஆனால் மறைமுகமாக தற்கால சமுதாய மனநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. படித்தால் வேலை எனும் கூற்றின் ஐம்பது வருடத் தொன்மையில், வேலை கிடைக்க எதை எவ்வளவு படிக்கவேண்டுமோ, அதைப் பாடமாய் அவ்வளவு படித்தால் போதும் என்கிற மனநிலை எழுச்சியுற்று நிலை பெற்றுள்ளது. மற்றதெல்லாம் பாடத்திட்டத்திற்கு வெளியே, பொருளீட்டும் திறனற்ற சிந்தைமிகைகள், ஏட்டுச்சிதிலங்கள், நேர விரயங்கள்.

அறிவியல் கல்வி, அடிப்படைக் கல்வி. அறிவியல் சிந்தையை வளர்க்கும் கல்வி. அறிவியல் சிந்தை என்பது ஒரு மனநிலை. அறிவியலை கற்பது அறிவியலாளனாய் ஆவதற்கு மட்டுமல்ல. குறைந்தபட்சப் பயனாய் அக்கல்வி கற்ற அனைவரும் அறிவியல் சிந்தை தரும் தெளிவில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவே.

அறிவியல் சிந்தையை விளக்க ஒரு தோற்ற மாயையை விவரிப்போம்.

எல் கிரக்கோ (El Greco) பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலிய மறுமலர்ச்சி காலத்து ஓவியர். இவர் வரைந்த கடைசிக் கால ஓவியங்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், தேவதைகள் என்று பாரபட்சமின்றி அனைவரும் நிஜத்தைவிட நீண்டு இழுக்கப்பட்டு ஒல்லியாக இருந்தார்கள். (படத்தைப் பார்க்கவும்).

இவ்வோவியங்களை சென்ற நூற்றாண்டின் மத்தியில் கவனித்த இங்கிலாந்தை சேர்ந்த ஒரு கண் மருத்துவர், எல் கிரக்கோ இறுதிக்காலங்களில் கண் நோயால் அவதிப்பட்டுள்ளார். அதனால் அவருக்கு மக்களே இப்படித்தான் இழுக்கப்பட்டு தெரிந்திருக்கிறார்கள். அதனால் தான் இப்படி வரைந்துள்ளார் என்று காரணம் கூறினார்.

நாம் சற்று விழிப்புடன் இருந்தால் இந்த கண் மருத்துவரின் அபத்தமான தர்க்கத்தை விளங்கிக்கொண்டுவிடலாம். அறிவியல் பாடங்கள் கற்றுத்தந்திருக்க வேண்டிய அறிவியல் சிந்தையும் இதுதான்.

உங்களுக்கு மேலே கண் மருத்துவர் கூறும் காரணம், கலையழகை ரசிக்கும் ரசிகஞானத்திலிருந்து மட்டுமல்ல, தர்க்க ரீதியாகவும் அபத்தம் என்று படித்தவுடன் தெரிகிறது என்றால், நீங்கள் அறிவியல் சிந்தையில் கெட்டி. ஏன் அபத்தம் என்று விளக்கிய பிறகும் புரியவில்லையெனின் நீங்கள் மந்தம்.

மேற்கூறிய உதாரணத்தை விளக்கி இப்படிக் கூறியவர், புற்றுநோய் ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்ற ஸேர் பீட்டர் மெடவார் என்ற இங்கிலாந்து விஞ்ஞானி.

கண் மருத்துவரது விளக்கத்தின் அபத்தம் என்ன?

தர்க்கத்திற்காக மருத்துவர் கூறுவது போல் ஒரு வியாதி இருக்கிறது என்றும், இதனால் பீடிக்கப்பட்டவர்களுக்கு பார்ப்பது எல்லாம் இரண்டாக தெரியும் என்றும் வைத்துக்கொள்ளுவோம். அழகான யுவதி ஒருத்தியை ஓவியமாக தீட்டப் பணிக்கையில், பார்ப்பதை வரையும் இந்த ஓவியர், ஒருவரை இருவராக பார்ப்பதால், இரு யுவதிகளை ஓவியச்சீலையில் வரைகிறார் என்றும் வைத்துக்கொள்ளுவோம். வரைந்து முடித்ததும் அவரே தன் ஓவியத்தை சரிபார்க்கையில், ஓவியத்தில் இருக்கும் இருவர் நால்வராக தெரிவார்களே. ஓவியத்தின் கோளாறு ஓவியருக்கே விளங்கிவிடும்.

ஒருவரை இருவராய் ஓவியர் பார்த்த நிஜத்துடன் ஒத்துப்போவது போல ஓவியம் சரியாக வரவேண்டும் என்றால், வரைகையிலும் ஒரு ஆளைத்தான் ஓவியர் வரைய வேண்டும். அப்பொழுதுதான் கண் கோளாறுடன் இருக்கும் ஓவியருக்கும் ஓவியம் சரியாக இருக்கும். அப்படி அவர் 'சரியாக' வரைந்த ஓவியம் பார்க்கும் மற்றவருக்கும் சரியாகத்தான் (ஒரு ஆளாகத்தான்) தெரியும்.

எல் கிரக்கோ, கண்கோளாறினால் பார்பவர்கள் நீண்டு தெரிவதால் இவ்வாறு தன் ஓவியத்தில் வரைந்திருந்தால், மீண்டும் தன் ஓவியத்தையே கவனிக்கையில் ஓவியத்தில் ஏற்கனவே நீண்டு இருப்பவர்கள் இவரது கண் கோளாறினால் இன்னமும் நீண்டு விகாரமாகத் தெரிந்திருப்பார்களே. எல் கிரக்கோவே கோளாறுணர்ந்து தன் ஓவியத்தையும் திருத்தித் தீட்டியிருப்பார்.

அவ்வோவியங்களில் மனித, தேவ உடல் நீட்சிகள் எல் கிரக்கோ வேண்டும் என்றே செய்த கலைவடிவமே. அப்படி நீண்டுதான் மற்றவர்களுக்கு தெரிய வேண்டும் என்று அவர் விரும்பியதால் அப்படிச் செய்தார். கண் கோள்றால் இல்லை.

சற்று யோசித்தபிறகுதான் இது புரிகிறது. சற்று யோசித்தபின் நாம் அனைவரும் அறிவியல் சிந்தையுள்ளவர்கள்தான்.

அறிவியல் கற்பது கடினம். ஊடாடும் வேறு அறிவுத்துறைகளின், கலைகளின், வாழ்க்கை இயல்பின் தாக்கங்கள் அறிவியலை கற்கையில் கவனக்கலைப்பிலேயே முடியும். அறிவியலின் கடினத்தை பெருக்கி வெறுத்தொதுக்க வைத்துவிடும்.

அறிவுத்துறையை, அறிவியலை, புரிந்துகொள்ள, பழகிக்கொள்ள, எனக்கும் இது புரியும், பழகிவிடும் என்ற மனத்திடம் வளர வேண்டும். நான் போதிக்கிறேன் நீ கேட்டுக்கொள் என்ற அதிகாரத்தினால், ஆச்சரிய நோக்கிழந்தவர்களுக்கு அறிவூட்டமுடியாது. அதேபோல், கடிப்பதற்கு கடினம் என்பதால் அறிவுத்துறை கற்கண்டு கசக்காது.

அறிவியல் சிந்தையின் மூலதனமே கேள்விகள் நிரம்பிய, பதில்களின் நிரந்தரத்தை சந்தேகிக்கும் மனதே. நிரந்தரமற்ற அண்டத்தை, சில நிலைகளில் தெளிவான, பல நிலைகளில் தெளிவற்ற, மொத்தத்தில் நிச்சயமற்ற புரிதலாக்கிக் கொள்ள, நிரந்தரமற்ற கேள்விகேட்கும் மனதே ஏற்றது. இந்த மனநிலைக்கு முக்கிய தேவை கூறியது யார் என்பதை விட்டு, கூறியதை தயங்காமல் சந்தேகித்து சுயபுரிதலுக்குட்படுத்துவது. இயற்கை நம் அனைவரையும் அடக்கியுள்ளதெனின், நம் அனைவருக்கும் அவரவர் முயற்சிக்கேற்ப புரியக்கூடியதே. இயற்கையின் ஒரு பகுதியான நமக்கு, ஏனைய பகுதிகளுடன் நிரந்தர புரிதல் உறவாட முடியாதா என்ன?

அறிவியல் கல்வியில் போதனா சாலைகளில் நமக்குள் இறங்கியிருக்க வேண்டிய இப்படிப்பட்ட அறிவியல் சிந்தையை, நம் கிராமத்து மூதாட்டியரிடம் கவனித்திருக்கிறோம். அன்றலர்ந்த தாமரையாய் முகம் மலர நீராடியபின் 'மஞ்சள் முதலிய பதினெட்டு வகை மூலிகைகள் சேர்த்து' தயாரித்த களிம்பை பூச எத்துணை விளம்பரம் செய்து இலவச தொலைக்காட்சி வழியாக இவருக்கு ஊட்டினாலும், நீராடுகையில் மஞ்சளையே அரைத்து நேரிடையாக பூசிக்கொள்ளலாமே என்பது இவருக்கு தெரியும்.

ஸ்ப்ளிட் ஏஸியோ சாதாரண ஏஸியோ, வீட்டின் ஒரு அறையை குளிரவைக்கிறது என்றால், வீட்டிலிருந்து எடுத்த உஷ்ணத்தை, வீட்டிற்கு வெளியே, நாட்டில் கொட்டித்தான் ஆகவேண்டும், அண்டை அயலானை, அருமை உலகானை சூடுபடுத்தியாக வேண்டும் என்கிற அறிவியல் சிந்தையை இவருக்கு சுலபமாக புரியவைக்க பொருளீட்டும் இன்றைய ஏட்டுக் கல்வி அவசியமில்லை. □

# மக்களின் விருப்புக்கு விரோதமாக யாழ்.மாநகரசபை செயற்படாது

## யாழ்.மாநகர முதல்வர் பேச்சு



(யாழ்ப்பாணம்)
மக்களின் அபிலாஷைகள் எண்ணங்களுக்கு மாறான எந்தவொரு திட்டத்தையும் யாழ்ப்பாண மாநகரசபை நடைமுறைப் படுத்தாது. யாழ்.பிரதேச கரையோர அபிவிருத்தி முன்னெடுத்துச் செல்லப்படும்போது இங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடையும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறு யாழ்.கொட்டடி சன சமூக நிலையத்தின் ஆண்டு விழாவிலும், கலைஞர் கௌரவிப்பு நிகழ்விலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா குறிப்பிட்டார்.

நா.தனேந்திரன் தலைமையில் கொட்டடி சனசமூக நிலைய முன்றலில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற இந்நிகழ்வில் மாநகரசபை முதல்வர் தொடர்ந்து பேசுகையில்,

இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைச் சார்ந்த தமிழ்மக்களும், முஸ்லிம் மக்களும் இணைந்து வாழ்கின்ற கொட்டடி, நாவாந்துறைப் பிரதேசங்கள் சன அடர்த்தி மிக்கவை. இப்பிரதேச மக்களின் தேவைகள் அதிகம் இவற்றை முழுமையாக நிறைவேற்றுவதற்கு மாநகரசபையிடம் போதியளவு நிதி வசதி இல்லை.

மக்களின் குடிநீர்ப்பிரச்சினை, மின்சார விநியோகம், போக்குவரத்து, இடிந்த கட்டங்களை அகற்றுதல் தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் நாள்தோறும் எமக்குக் கிடைக்கின்றன. இவற்றை நிவர்த்தி செய்வதற்கான நிதியைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

தற்போது யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களை மதிப்பீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. எதிர்காலத்தில் இதன்மூலம் மாநகரசபையின் வருமானம் 75 சதவீதத்தில் அதிகரிக்கும். அப்போது இப்பிரதேச மக்களின் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யமுடியும்.

வில்லூன்றி மயானத்துக்கு அருகாமையில் மலேசியன் முதலீட்டாளரினால் அவரது சொந்தக் காணியில் விடுதி அமைக்கப்படவிருந்த நிலையில், நாங்கள் அப்பிரதேச மக்களுடன் ஆலோசனை நடத்தியபோது "வில்லூன்றி மயானத்தின் விழுமியத்தை யாழ்.மாநகரசபை அழித்துவிடும்" என்ற வதந்தி பரவியிருந்தது. மக்களின் எண்ணங்களுக்கு மாறான திட்டங்களை நாம் ஒருபோதும் நடைமுறைப் படுத்தமாட்டோம்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் யாழ்.கடற்கரை வீதியில் தமது முதலீட்டைச் செய்வதால், யாழ். நகரம் அழகுபடுத்தப்படும். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரம் உயர்வடையக்கூடியவாறு தொழில் வாய்ப்புக்கள் பெருகும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

புகழ்பூத்த கல்வியாளர்கள், வர்த்தகர்கள் வாழ்ந்த இப்பிரதேசம் மீண்டும் மலர்ச்சி பெற வேண்டும். இதற்கு மக்கள் மனங்களில் நல்ல மாற்றம் ஏற்பட வேண்டும்.

வவுனியா நகரசபை செயலிழந்தது போல எமது மாநகர சபை நிர்வாகத்தை முடக்கச் சிலர் ஊழல், மோசடி எனத் தப்பான பிரசாரங்களை மேற்கொள்கிறார்கள். எவ்வித ஆதாரங்களும் இன்றி எமது கட்சி மீதும், நாம் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் மீதும் சேறு பூச முற்படுகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் நாம் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதன் மூலம் எம்மை மக்களிடம் இருந்து பிரித்துவிட முடியாது. போலியான அரசியல் வாதிகளின் கதைகளுக்கு எமது மக்கள் எடுபடமாட்டார்கள் எனவும் குறிப்பிட்டார்.

யாழ்.குடாநாட்டின் சமூக சேவையாளர் பலருக்கும் உயர் தகைமை பெற்ற மாணவர்களுக்கும் விருதுகளும், பிரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (10)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதாரக் கருத்தரங்கு மற்றும் உணவக உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 1.00 மணிக்கு சுகாதாரப் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் தென்மராட்சிப் பிரதேச உணவக உரிமையாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (11)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(சாவகச்சேரி)
சாவகச்சேரி சுகாதார வைத்தியப் பணிமனையில் போஷாக்கு வாரத்தினை முன்னிட்டு போஷாக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி கலாச்சார மண்டபத்தில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பொதுமக்களைக் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.(11)

## கடன்பெறும் விவசாயிகள் நாடு முழுவதும் அதிகரிக்கிறது

(கொழும்பு)
வங்கிகளில் கடன் பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை நாட்டில் சடுதியாக அதிகரித்து வருவதாக மத்திய வங்கியின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

உள்நாட்டு வர்த்தக வங்கிகளுடன் பணப்பரிமாற்றம் செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கை துரிதகதியில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணக்கூடிய சிறந்த வகையிலான அறிகுறியாக இது விளங்குவதாக மத்திய வங்கியின் உதவி ஆளுநர் டபிள்யூ எம் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 1998ஆம் ஆண்டு உள்நாட்டு வர்த்தக வங்கிகளிடமிருந்து நான்காயிரம் விவசாயிகள் மாத்திரமே கடன் வசதிகளை பெற்று கொண்டார்கள்.

ஆனால், தற்போது அந்த தொகை ஒரு இலட்சம் வரை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் வருடாந்தம் விவசாயிகள் வங்கிகளிடமிருந்து கடனாக பெற்றுக் கொண்ட தொகை சுமார் 400 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர கடனை பெற்ற விவசாயிகள் அவற்றை உரிய முறையில் மீள செலுத்துவதிலும் ஆர்வத்தை வெளிப்படுத்துவதாக மத்திய வங்கியின் உதவி ஆளுநர் டபிள்யூ எம். கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

## சுயலாப அரசியல்...

மாறாக மாவை எம்.பியின் சுயநல அரசியல் இலாபம் சார்ந்தனவாக இருந்தன.

மாவை சேனாதிராசா எம்.பி எந்த ஒரு அரசியல் மேடையிலும் சிங்கள பேரினவாதம் என்கிற சொல்லைத் பயன்படுத்தத் தவறியதே இல்லை. தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி உணர்ச்சிப் பெருக்கோடு பேசுபவர்.

இவரின் பேச்சைக் கேட்கின்றவர்களின் நரம்புகள் முறுக்கேறிவிடும். எதிர்ப்பு அரசியலில் மிகவும் தீவிரமாக இருப்பவர்.

ஆனால், குடும்ப நலன், தனிப்பட்ட ஈட்டம் ஆகியவற்றுக்காக இவர் அரசுத் தரப்பினருடன் கள்ளத் தொடர்புகள் வைத்து இருக்கின்றார்.

அந்த வகையிலேயே அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடனான அண்மைய சந்திப்புக்களாகும்.


இச்சந்திப்புக்களின் போது மாவை சேனாதிராசா தனது மகளின் உயர்கல்விக்கு புல மைப் பரிசில் வழங்க வேண்டும் என்று இரந்து கேட்டு வருகின்றார்.

மாவை சேனாதிராசா எம். பிக்கு மிகவும் நெருக்கமான ஒப்பந்தகாரர் ஒருவர் இருக்கின்றார். இந்த ஒப்பந்தகாரருக்கு வடக்கின் வேலைத் திட்டங்களில் சிலவற்றையேனும் கையளிக்க வேண்டும் என்றும் பசில் ராஜபக்ஷவிடம் இறைஞ்சுகின்றார்.

இந்த விடயம் தொடர்பாக தமிழ் சி.என்.என் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

தனது மகள் கல்வியைத் தொடர்ந்து வருகிறார் என்பதை உறுதிப்படுத்திய மாவை சேனாதிராசா, இந்த விடயத்தை பெரிதுபடுத்த வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதேநேரம் ஐ.நா. போர்க்குற்ற அறிக்கை வெளிவந்த போது மாவை எம்.பி. உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மற்றும் இலங்கையின் சட்டமா அதிபரை வேறு வேறாக சந்தித்து இலங் கையின் தேசிய கொள்கைக்கு எதிராக செயல்படபோவது இல்லை எனவும் ஐ.நா அறிக்கைக்கு ஆதரவு கொடுக்கப்போவது இல்லை எனவும் வாக்குறுதியளித்திருந் தமை குறிப்பிடத்தக்கது.



பாழ்ப்பாணம் அரசடி வீதியில் நேற்று லண்டன் மெற்றோ பொலிரன் கொலிச் நிறுவனத் திறப்பு விழாவின் ஒரு பதிவு.

## யாழ்.நகரில்...

5 சிசுக்கொலைகள், 15 சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களைவிட தற்கொலை வீதம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக அதிர்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகவிருக்கும் இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் உட்பட பலர் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (27)

## சூரிய சக்தியில்...

செர்பிய பல்கலைகழக மாணவர்கள் உருவாக்கியுள்ள இந்த மின்சக்தி ஊட்டுவான் பெல்கிரேடுக்கு வெளியே உள்ள நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஐரோப்பிய ஒன்றியத் தின் கௌரவம் மிக்க பரிசு ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒப்ரோனேவேக் நகரத்தில் எ∴குவினால் உருவாக்கப்பட்ட சுமார் 5 மீட்டர் உயரம் கொண்ட கம்பியின் மேல் சூரிய ஒளி தகடுகள் பதிக்கப்பட்டுள்ளது. இங்கு உருவாகும் மின்சாரம் இந்த கம்பியின் கீழே உள்ள 16 வகையான வயர்கள் மூலம் வெவ் வேறு விதமான செல்லிடை தொலைபேசிகளுக்கு மின் சக்தியை கொடுக்கின்றது. இந்த உபகரணத்தை ஸ்ட்ரா பெர்ரி மரம் என்று இவர்கள் கூறுகின்றார்கள். இந்த வசதியை பொது மக்கள் யார் வேண்டுமென்றாலும் பயன்படுத்தி கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# சீரடைய மறுக்கும் நெடுந்தீவு படகுப் பயணம்

## சமூக அமைப்புக்கள் சீற்றம்



(ஊர்காவற்துறை)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுப் போக்குவரத்து நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று தீவகத்தின் சமூக அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன.

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான பயணிகள் கடற்போக்குவரத்தில் ஈடுபடும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குமுதினி படகு தற்போது குறுகிய காலத்தில் பல லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டு மீளவும் சேவையில் ஈடுபட்ட நிலையில் மீண்டும் பழுதடைந்து திருத்த வேலைகளுக்காக ஊர்காவற்துறைப் பகுதியில் தரித்து விடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது நெடுந்தீவு - குறிகாட்டுவானுக்கான பயணிகள் கடற் போக்குவரத்தில் நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கப் படகான சமுத்திரதேவா படகு மற்றும் தனியார் படகுகள், கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கான மீன் பதப்படுத்தல் படகு என்பனவே பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

தற்போது சேவையில் ஈடுபடும் திறந்த படகுகளில் பயணிக்கும் அரச உத்தியோகத்தர், திணைக்களத் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நெடுந்தீவு - குறிகாட்டுவான் பகுதிக்கான கடற்போக்குவரத்து நெருக்கடிகளை இலகுவாக்குவதற்காக 800 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டு கடந்த பல மாதங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட வடதாரகை II படகு நெடுந்தீவு துறைமுகப்பகுதி ஆழமாக்கல் பணிகள் இடம்பெறாமையால் சேவையில் ஈடுபடமுடியாது பல மாத காலமாக காரைநகர் பகுதியில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நெடுந்தீவு - குறிகாட்டுவான் கடற் போக்குவரத்தில் மக்கள் படும் துன்பங்களையும் சிரமங்களையும் கருத்திற்கொண்டு ஸ்திரமான போக்குவரத்து வசதிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நட[illegible]க்கை மேற்கொள்ள வேண்டுமென நெடுந்தீவு சமூக அமைப்புக்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (27)

# தேங்காய் உற்பத்தி நாட்டில் அதிகம்



(கொழும்பு)

இலங்கையில் தேங்காய் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தற்போது தேங்காய் வேண்டிய அளவு சந்தையில் உள்ளதாக லுணுவில தென்னை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டின் வருடாந்த தேவை 200 கோடி தேங்காய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த வருடத்தில் 270 கோடி தேங்காய்கள் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேங்காய் உற்பத்தி உயர் நிலையில் காணப்படுவதனால், சந்தையில் தேங்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெங்கு ஆராச்சி நிலையத்தின் பணிப்பாளர் ஜயந்த குணதிலக தெரிவித்துள்ளார்.

# மாகாண மட்ட கூடைப்பந்தாட்டம் யாழ். பாடசாலைகள் முன்னணியில்

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் முதல் 3 இடங்களையும் பெற்றுக்கொண்டது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றுமுடிந்த 19 வயது ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி முதலாம் இடத்தினையும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி 2 ஆம் இடத்தினையும், யாழ். இந்துக் கல்லூரி 3 ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

இன்றைய தினம் நடைபெறவிருக்கும் போட்டிகளில் பாடசாலை மாணவிகளுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியும், பெண்களுக்கான ஹொக்கி இறுதிப் போட்டியும் இடம்பெறவுள்ளன. (39)


# மரண அறிவித்தல்



## சிங்கராயர் திரேசம்மா

பாஷையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராயர் திரேசம்மா (நல்லம்மா) 17.06.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2011) 35/2, 2 ஆம் குறுக்குத் தெரு, பாசையூரில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பிற்பகல் 2 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு, அதன்பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(ஜெயா -மகன்)
தொ.பே: 077 1380907

35/2, 2 ஆம் குறுக்குத் தெரு.
பாசையூா, யாழ்ப்பாணம். (123)


# கடத்தல் பிடிபட்டது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 100 கிலோ கிராம் கடல் வெள்ளரிக்காய் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள் சிலவற்றை இலங்கைக்கு கடத்த முற்பட்ட போது மண்டபம் பகுதியில் வைத்து தமிழ்நாட்டு வன பாதுகாப்பு ஊழியர்களால் கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

16 சிறிய பைகளில் இவை பகிரப்பட்டு கொண்டு செல்ல முயற்சிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 45 வயதான சந்தேகநபரை 15 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு ராமேஸ்வர நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தாயும் மகனும் சடலமாக மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை நிலாவெளி கோபாலபுரம் பகுதி கால்வாயிலிருந்து இரு சடலங்கள் குச்சவெளி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வீட்டிலிருந்து சென்று காணாமல் போனவர் என்று சந்தேகிக்கப்பட்ட 35 வயது தாயார் ஒருவருடையதும் 14 வயது மகனுடைய சடலமுமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கால்நடை மருத்துவர் பணிமனை காரைநகரில் அமைக்க ஏற்பாடு

(யாழ்.நிருபர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கால்நடை வைத்தியர் பணிமனை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கால்நடை வைத்திய அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கால்நடை வைத்திய பணிமனையை அமைப்பதற்கு அரச காணி ஒன்றையோ அல்லது சமூக அமைப்புக்கள் ஊடாக தனியார் காணி ஒன்றைக் கொள்வனவு செய்தோ தரும்படி காரைநகர் உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், காணி கிடைக்காத பட்சத்தில் மேற்படி பணிமனைக் கட்டடத்துக்கான நிதி கிடைக்காமல் போய் விடுமெனவும் கூறப்படுகிறது.(10)

# காரை - ஊர்காவற்துறை போக்குவரத்து சீராகுமா?



(யாழ்.நிருபர்)

காரைநகர் - ஊர்காவற்துறை படகுப் பாதை சேவை சீரின்மையால் அரச ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

காலை 7.30 மணிக்குப் புறப்படும் படகுப் பாதையைத் தவறவிட்டால் மீண்டும் பல மணி நேரம் காத்து நின்றே பயணம் செய்ய வேண்டியுள்ளதால் தாம் அலுவலகங்களுக்கு பிந்திச் செல்ல வேண்டியுள்ளதாக அரச ஊழியர்கள் கூறுகின்றனர்.

பொலிஸ் நிலையம், நீதிமன்றம் மற்றும் அரச திணைக்களங்கள் ஊர்காவற்துறையில் அமைந்துள்ளதால் காரைநகர் மக்கள் இப்படகுப் பாதையைப் பயன்படுத்துகின்றனர். படகுப் பாதையின் சேவை நேரம் அ[illegible]கடி மாற்றப்படுவதாலும் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர். (10)

# கச்சதீவு இந்தியாவுக்கு வேண்டாம் தமிழகத்தின் கோரிக்கை நிராகரிப்பு

(சென்னை)

கச்சதீவை இலங்கையிடமிருந்து மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படமாட்டாது என்று இந்திய மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

கச்சதீவை மீளப் பெற வேண்டுமென்று இந்திய மத்திய அரசாங்கத்திடம் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பது குறித்து தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் அண்மையில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

மன்மோகன் சிங் தலைமையிலான இந்திய மத்திய அரசாங்கத்துக்கு கச்சதீவை திரும்ப பெற்றுக் கொள்வது குறித்து எதுவித நோக்கங்களும் கிடையாதென அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

1974ஆம் ஆண்டு இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெற்று அங்கு தமிழக மீனவர்களுக்கு மட்டுமே மீன்பிடிப்பதற்கான அனுமதியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டு[illegible] தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மார்பகப் புற்றுநோய்க்கு பரீட்சார்த்த சிகிச்சை

## ஏழைப் பெண்கள் பலர் பாதிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில், புதிய மருந்துகளுக்காக பெண்கள் மீது நடாத்தப்பட்ட சோதனைகள் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளன.

மார்பகப் புற்று நோய்க்கான புதிய வகை மருந்து ஒன்றுக்காக குண்டூர் மாவட்டத்தில் பல ஏழை பெண்களிடம் நடத்தப்பட்ட பரிசோதனையின் காரணமாக பலருக்கு பாதிப்புகள் ஏற்பட்டு தற்போது மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த புதிய மருந்துக்கும் அதை மனிதர்களிடம் சோதித்து பார்ப்பதற்கும் அரசிடம் முறையான அனுமதிகள் பெறப்படவில்லை என்கிற தகவல் தற்போது வெளியாகியுள்ளது

இவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஏழைப் பெண்கள். இவர்களிடம் முறையானபடி விளக்கங்கள் அளிக்கப்படாமல் ஒரு படிவத்தில் சோதனைகளை நடாத்திய மருந்து நிறுவனம் கையெழுத்து வாங்கியது என்று தற்போது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதன் காரணமாக பல பெண்களுக்கு உடல் ரீதியாக பாதிப்புகளை ஏற்படுத்திய நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிடுகுருல்லாப் பகுதியில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஆந்திரப் பிரதேசத்தின் மாநில மனித உரிமைகள் ஆணையம் இந்தப் பிரச்சினையை கையில் எடுத்ததன் விளைவாக தற்போது பொலிஸார் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

முறையான தகவல்களை வெளிப்படுத்தாமல் இந்தச் சோதனைகளை நடத்தியது வாழ்வியல் உரிமைகளை மீறும் செயல்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.